REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 டிசம்பர் 7 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

வருட. 91 இல. 290 | Thursday 07, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-




# நாட்டின் முன்னேற்றப் பாதைக்கான புதிய பொருளாதார திட்டம் ஜனவரியில்

## புதிய பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டு செல்வதைத் தவிர வேறு வழியில்லை



### கடந்த சில வருடங்களில் முகம் கொடுத்த கஷ்டமான அனுபவங்கள் அடுத்த தலைமுறை வரை கொண்டு செல்லப்பட மாட்டாதென்றும் ஜனாதிபதி வலியுறுத்து

சகல துறைகளையும் நவீனமயப்படுத்தி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் புதிய பொருளாதார வேலைத் திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பழைய முறைகளை தொடர்வதன் ஊடாக நாட்டுக்கு எதிர்காலம் கிடையாதெனவும், கடந்த சில வருடங்களில் ஒரு தேசம் என்ற வகையில் நாம் எதிர்கொண்ட கசப்பான அனுபவத்தை எதிர்கால சந்ததியினர் வரை கொண்டு செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, புதிய பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதற்கு சகலரும் இணைந்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

புறக்கோட்டையிலுள்ள சோலிஸ் ஹோட்டலில் 06

# 1-5 / 6-9 / 10-13: தரங்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 2024 இல்

## கல்விக் கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்கவும் நடவடிக்கை



சகல வகுப்புத் தரங்களுக்கும் புதிய கல்வி சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் எனவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுசரணையாளர்களின் ஆதரவுடன் கல்விக் கட்டமைப்பை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிர்காலத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தரம் 10 இலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை தரம் 12 06

# IMF இரண்டாம் தவணை ஒரு வாரத்துள் கிடைக்கும்



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை ஒரு வாரத்துக்குள் நாட்டுக்கு கிடைக்குமென நம்புவதாக அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (06) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலே, அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். 06

# முன்னாள் DIG நாலக்கவை விடுதலை செய்ய உத்தரவு



முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டிய வழக்கில் பிணையிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் நாலக்க சில்வாவை 06

# தமிழ் மக்களை புறக்கணிக்கவுமில்லை நாம் புறக்கணிக்கப்போவதுமில்லை

## வடக்கு, கிழக்கில் இந்து ஆலயங்கள் விரைவில் புனரமைப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

தமிழ் மக்களை நாம் புறக்கணிப்பதில்லை, இனிமேல் புறக்கணிக்கப் போவதுமில்லையென தெரிவித்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் தொன்மை வாய்ந்த இந்து ஆலயங்களை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 06

# அரச பொறியியல் கூட்டுத்தாபன ஊழியர்களை தனிப்பட்ட தேவைக்கு பயன்படுத்தி சஜித் மோசடி

## அரசுக்கு ரூபா 42 மில்லியன் நஷ்டம்: பதவி விலக வேண்டும்



லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சராக இருந்தபோது, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பத்தொன்பது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தனது தனிப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தியதால், அரசாங்கத்துக்கு ரூபா 42 மில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக உள்ளக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கணக்காய்வு அதிகாரி என்.வி.டி தம்மிகவின் கையொப்பத்துடன் 2020 இல் வெளியாகியிருந்ததாக 06



# வலம்புரி சங்கை 03 கோடிக்கு விற்க முயன்றவர் கைது

பதுளை பிரதேசத்தில் விலையுயர்ந்த வலம்புரி சங்கை 03 கோடி ரூபாவுக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்யவிருந்த நபரொருவர், நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் பதுளை பிரதேசத்தை சேர்ந்த 38 வயது நபரென பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு 06

# தொற்றாநோயை கட்டுப்படுத்த =ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு 500 மில்லியன் யென்

## முதற்கட்டமாக 49 மில்லியனை கையளித்தது ஜப்பான்

இலங்கையில் தொற்றா நோய்களை (NCD) கட்டுப்படுத்தி அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களை குறைக்கும் நோக்கில் ஜப்பானிய மக்கள் 500 மில்லியன் யென், பெறுமதியான நவீன மருத்துவ உபகரணங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்தியசாலைக்கு வழங்கினர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் நேற்று (06) இதற்கென முதற்கட்டமாக 49 மில்லியன் யென் வழங்கப்பட்டது.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் 06



# பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் அமைக்கப்பட வேண்டும்

## கல்வி மறுசீமைப்புடன் இது சாத்தியமாகும் – அமைச்சர் சுசில்

பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் அமைக்கப்படுமென ஆரம்பத்திலிருந்து தெரிவிக்கப்பட்டு வந்தாலும் இன்னும் அது, ஏற்படுத்தப்படவில்லை. இதனால் அவசரமாக அதனை செய்யவேண்டுமென கோரிக்கை விடுப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையின் பின்னர் கல்வி வலயங்கள், கொத்தணி அலுவலகங்களாக ஏற்படுத்தப்படும்போது பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் ஒன்று ஏற்படுத்தப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஹக்கீமின் கேள்விக்கு உடனடியாக பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் (05) நடைபெற்ற கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு 06

# குர்ஆன் மதரஸாவில் தூக்கில் தொங்கிய சிறுவன் சடலமாக மீட்பு



## சாய்ந்தமருது மதரஸாவின் நிர்வாகி பொலிஸாரால் கைது

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

சாய்ந்தமருது சந்தை வீதியிலமைந்துள்ள மதரஸாவில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன் ஒருவன் சடலமாக (05) 06



# வடக்கு, கிழக்கின் 28 சிறுவர்கள் மலேசியாவுக்கு கடத்தல்

## CID நீதிமன்றில் தெரிவிப்பு

இலங்கையிலிருந்து இந்தியாவூடாக மலேசியாவுக்கு சிறுவர்களை கடத்தும் ஆட்கடத்தல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக (50) கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் அறிவித்தது.

ஆட் கடத்தலில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 05 வயதுக்கும் 17 வயதுக்குமிடைப்பட்ட 28 சிறுவர்கள் இலங்கையிலிருந்து மலேசியாவுக்குக் கடத்திச் 06



## தாமரை கோபுரத்தால்

# 14 மாதங்களில் மட்டும் ரூ. 102 கோடி வருமானம்

கொழும்பில் தாமரை கோபுரத்தை பார்வையிட வந்த பார்வையாளர் மூலம் 14 மாத காலப்பகுதிக்குள் 102 கோடியே 59 இலட்சம் (1,025.9 மில்லியன்) ரூபா வருமானத்தை பெற முடிந்துள்ளதாக கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2022 செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் (05) வரையான காலப்பகுதியிலேயே, இந்த வருமானத்தை 06



# நகர்வலம்



## கலாநிதி எம்.எம்.எம். நயீம் எழுதிய 'ஸூரத்துல் கஹ்பின் ஒளியில்' அல்குர்ஆன் விரிவுரை வெளியீடு

### இன்று கொழும்பு தபால் தலைமையகத்தில்

பாதிஹ் உயர்கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எம். நயீம் (நளீமி, Phd) எழுதிய 'ஸூரத்துல் கஹ்பின் ஒளியில்' என்ற அல்குர்ஆன் விரிவுரை நூலின் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை (07) மாலை 6.30 மணிக்கு கொழும்பு 10, டீ.ஆர் விஜேவர்த்தன மாவத்தையிலுள்ள தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கலை பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். கபூர்தீன் (Phd) தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம்.எம். நயிமுதீன் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக ஆய்வுக்கான மிஷ்காத் நிறுவனத்தின் பணிப்பாளர் உஸ்தாத் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மன்ஸூர் ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர். விசேட அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் கலந்து கொள்ளவுள்ளதோடு நூலின் அறிமுகத்தை பாதிஹ் உயர்கல்வி நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் ரவூப் ஸெய்ன் வழங்குவார்.

## மாத்தறை வைத்தியசாலையில் ரூ 100 மில். செலவில் டிஜிட்டல் எக்ஸ்ரே இயந்திரம்

### நோயாளர் பாவனைக்காக விரைவில் திறக்க நடவடிக்கை



மாத்தறை மாவட்ட பொது வைத்திய சாலையில் நிறுவப்பட்டுள்ள சுமார் 100 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய டிஜிட்டல் எக்ஸ்ரே பரிசோதனை இயந்திரம் (Optima TM XR646 HD) அடுத்த வாரம் முதல் நோயாளர்களுக்கான சிகிச்சைகளுக்காக இணைக்கப்படவுள்ளது. சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் இந்த எக்ஸ்ரே பரிசோதனை இயந்திரம் தென் மாகாணத்தில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரே எக்ஸ்ரே பரிசோதனை இயந்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் மாத்தறை கம்புறுகமுவ புதிய மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியவற்றினால் வழங்கப்படும் நோயாளர்களுக்கான சிகிச்சை தேவைகளை கண்டறிந்து, தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கும் நோக்கில், சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால வைத்தியசாலைகளுக்கு கடந்த வாரம் விஜயம் செய்தார். அச்சமயம் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய இந்த டிஜிட்டல் எக்ஸ்ரே ஆய்வு இயந்திரத்தையும் பார்வையிட்டார்.

இந்த எக்ஸ்ரே இயந்திரம் சுவாச நோய்களைக் கண்டறிவதற்கான பிரத்தியேக மருந்துகளைப் பெறுவதற்கான அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் முக்கியமாக எலும்பியல் மற்றும் சுவாச நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

மாத்தறை மாவட்ட பொது வைத்திய சாலைக்கு நாளாந்தம் 150 தொடக்கம் 200 நோயாளர்கள் எக்ஸ்ரே பரிசோதனை சேவைகளை பெற்றுக்கொள்வதாகவும், இந்த இயந்திரத்தின் மூலம் தலா 100க்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு எக்ஸ்ரே அறிக்கைகளை வழங்க முடியும் எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் சுகாதார செயலாளரிடம் சுட்டிக்காட்டினர்.

## தெனிப்பிட்டியவில் விபத்து; ஒருவர் பலி, ஒருவர் காயம்



**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம, தெனிப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் நேற்று (06) தெரிவித்தனர். வெலிகம கோட்டகொடையைச் சேர்ந்த இர்தான் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார். முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த சமயம் பஸ் வண்டியில் மோதுண்டு இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நாச்சியாதீவில் நிகழ்வுகள்

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

இனங்களுக்கிடையில் ஒற்றுமை சமாதானம் வேண்டி ஏற்பாடு செய்யப்பட்ட பல்லின மக்கள் ஒன்று கூடிய கலை கலாசார நிகழ்வுகள் அண்மையில் நாச்சியாதீவில் இடம் பெற்றது. நாச்சியாதீவு பிரதேச செயலகம், சமுர்த்தி திணைக்களம், நாச்சியாதீவு நன்னீர் மீனவர் சங்கம் ஆகியன இணைந்து இந்த ஒற்றுமை நிகழ்வை ஏற்பாடு செய்து ஒருநாள் நிகழ்வாக நாச்சியாதீவு குளத்தில் இடம் பெற்றது. சமுர்த்தி உதவி பெறும் அங்கத்தவர்கள், பொதுமக்கள், பிரதேச முஸ்லிம்கள் பிரதேச



சிங்களவர்கள், தமிழர்கள் பௌத்த, இஸ்லாம், சமய தலைவர்கள், அத்துடன் நாச்சாதுவ பிரதேச செயலாளர், ஹிதோகம பொலிஸார், நாச்சியாதீவு மீனவர் சங்க தலைவர் உட்பட அங்கத்தவர்கள், நாச்சியாதீவு535, 536 கிராம உத்தியோகத்தர்கள், சமூக சேவை அதிகாரிகள், அநுராதபுரம் திட்டமிடல் பணிப்பாளர், நாச்சியாதீவு ஜும்மா பள்ளி நிர்வாக தலைவர் தேசமான்ய ஏ.ஆர்.எம்.தாரிக் உட்பட நிர்வாக அங்கத்தவர்கள், உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். பல்லின பாடசாலை மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள், விளையாட்டுக்கள், போட்டி நிகழ்வுகள், உணவு பண்டங்கள் பரிமாறல், போன்ற சமூக ஒற்றுமையை காட்டும் முன்மாதிரி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு இங்கு சிறப்பாக இடம்பெற்றன.



## பேருவளை, மரக்கலாவத்தை பகுதியில் மருத்துவ நிலையம் இன்று திறந்து வைப்பு



பேருவளை, மரக்கலாகத்தை ஹேன பகுதியில் சீனன்கோட்டையைச் சேர்ந்த சமூகசேவையாளர் அல்ஹாஜ் எம்.ஐ. எம். பாக்கீர் அவர்களினால் சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட காணியில் சீனன் கோட்டை மக்களினதும் மரக்கலாவத்த மக்களினதும் பூரண பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ நிலையம் மற்றும் பல்துறைகட்டடம் இன்று (07) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் மற்றும் பேருவளை பிரதேச செயலாளர் ரஞ்ஜன் பிரியசாந்த பெரேரா ஆகியோரினால் மக்களின் பாவனைக்காக வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. மருத்துவ நிலையத்துடன் கிராம சேவகர் அதிகாரி அலுவலகம், சமுர்த்தி அதிகாரி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான அலுவலகம் என்பன இப்பகுதி கட்டடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக இப்பகுதியில் இருந்துவந்த மருத்துவ நிலையம் இல்லாக் குறை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது.

இக்கட்டடத்திற்கு சுமார் 90 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. திறப்பு விழா நிகழ்வில் பள்ளிச் சங்க உறுப்பினர்கள், அரசஅதிகாரிகள் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

## கற்பிட்டி கீரிமுந்தவில் பீடி இலைகள் கண்டுபிடிப்பு

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

கற்பிட்டி கீரிமுந்தல் களப்பு பகுதியில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒருதொகை பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



எனினும் இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் கீரிமுந்தல் களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, குறித்த களப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான 8 மூடைகள் காணப்பட்டுள்ளதுடன், அந்த மூடைகளை சோதனையிட்ட போது அதில் பீடி இலைகள் இருப்பது தெரியவந்துள்ளது. குறித்த எட்டு மூடைகளில் இருந்து ஈரமான எடையுடன் 465 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 465 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலேசிய வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள் தின விழா



**(ருஸைக் பாரூக்)**

ஸ்ரீலங்கா மலேசிய வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்த உறுப்பினர்கள் தின வைபவம் மாண்டரினா ஹோட்டலில் சங்கத்தின் தலைவர் எம். எச். கே. எம். ஹமீஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் இலங்கைக்கான மலேசியா உயர் ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆடம், இரு நாடுகளுக்கிடையிலான வலுவான உறவுகளுக்கு நன்றி தெரிவித்தும், சமூகத்திற்குள் தொடர்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தும் உரை நிகழ்த்தினார்.

ஸ்ரீலங்கா மலேசிய வர்த்தக சங்கத்தின் ( News Letter ) செய்தி மடலின் மூன்றாம் பதிப்பு இதன்போது வெளியிடப்பட்டது. சங்கத்தின் தலைவர் ஹமீஸ், மலேசியாவின் உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கு செய்திமடலின் முதல் பிரதியை வழங்கினார்.



கஷ்ட, அதிகஷ்ட, தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரிவேனாக்களில் கல்வி பயிலும் பிக்கு மாணவர்கள் சீலமாதாக்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு பாதணிப் பரிசுக் கூப்பன் வழங்கும் வடமத்திய மாகாண நிகழ்வு கடந்த (04) அநுராதபுரம் சாலியபுர தெப்பகுளம் வித்தியாலயத்தில் இடம்பெற்து. இதன் போது மாகாண பிரதான கல்வி அமைச்சின் செயலாளர் அஹய லக்ஷ்மி ஹேவ பத்திரன கூப்பன்களை வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## கடையாமோட்டை மு.ம. சிறந்த பெறுபேறு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் புத்தளம் தெற்கு கோட்டத்திற்குட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் பரீட்சைக்கு தோற்றிய 90 மாணவர்களுள் 75 மாணவர்கள் உயர் தரம் கற்கத் தகுதியைப் பெற்று 83.3% வீத சித்தியைப் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.எச். எம்.தௌபீக் தெரிவித்தார். அந்த வகையில் பௌசுல் ஸம்லத் ஸனா என்ற மாணவி 9A சித்தியையும், ஸம்சுராபி பாத்திமா ஸாபியா மற்றும் முஹம்மது இக்பால் பாத்திமா நஸ்மின் ஆகியோர் 8A, B சித்தியையும், எம்.எச்.முஹம்மத் ஹம்தான் 8A, C சித்தியையும் பெற்றுள்ளனர்.

## திக்குவல்லை அல் மின்ஹாத் மாணவி அமானி சாதனை



**(வெலிகம தினகரன் நிருபர்)**

அண்மையில் வெளியாகிய 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாறை / திக்குவல்லை அல் மின்ஹாத் தேசிய பாடசாலை மாணவி எம்.வை.ஏ. அமானி தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளிலே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரை வாழ்த்தி பாராட்டுவதோடு கற்பித்த ஆசிரியர்கள் அதிபர், பிரதி அதிபர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

## அம்பலந்துவ இல்மா மாணவன் சித்தி

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



பாணந்துறை அம்பலந்துவ இல்மா முஸ்லிம் வித்தியாலய மாணவன் முஹம்மத் அஸ்மி லுக்மான், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் அம்லந்துவையைச் சேர்ந்த முஹம்மத் அஸ்மி, ஜெலீஷா அக்பர் தம்பதிகளின் புதல்வராவர். மேற்படி மாணவனை பாடசாலை சமூகம் பாராட்டியுள்ளது.

## 25 வருட கால சமூகப் பணியில் தர்கா நகர் பாஸி ஸுபைர்

தர்கா நகரைச் சேர்ந்த அறிவிப்பாளரும், எழுத்தாளரும், கலைஞருமான எம். பாஸி ஸுபைரின் 'சமூகப் பணியில் பாஸி ஸுபைர்' என்ற தலைப்பிலான நூலின் வெளியீட்டு விழா தர்கா நகரில் விரைவில் இடம் பெறவுள்ளது. 'முத்துக்கள் முப்பது', 'பாராளுமன் றத்தில் சுடர்விட்டோர்கள்' ஆகிய நூல்களை ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ள பாஸி ஸுபைரின் மூன்றாவது நூலாகவே '25 வருட கால சமூகப் பணியில் தர்கா நகர் பாஸி ஸுபைர்' என்ற நூல் வெ ளிவர உள்ளது. தினகரன் ஊடக அனுசரணையில் இடம்பெற உள்ள இவ்விழாவுக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை தாங்கவுள்ளார். இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதேச அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், பாடசாலைகளின் அதிபர்கள், சமூக முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்துக் கொள்ளவுள்ளனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2023 டிசம்பர் 7 வியாழக்கிழமை


தொழுகை நேரம்
சுபஹ் - 04.49
ளுஹர் - 12.04
அஸர் - 03.25
மஃரிப் - 05.55
இஷா - 07.09

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் கார்த்திகை 21
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## நுவரெலியா தபாலக கட்டடத்தை முதலீட்டுக்கு பயன்படுத்த அனுமதி

நுவரெலியா தபால் நிலைய கட்டடத்தை முதலீட்டு திட்டத்துக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி, அதன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவிக்கையில், தபால் நிலையத்துக்கு மாற்று இடம் வழங்கிய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பேர வாவி அபிவிருத்தி திட்டம் குறித்து மீளாய்வு

கொழும்பு, கங்காராம, பேர வாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் மற்றும் அதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை உடனடியாக ஜனாதிபதியிடம்

06

# டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த விசேட திட்டம்

### விரைந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலகம் பணிப்பு



டெங்குவை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவினருடன் (05) நடத்திய கலந்துரையாடலில் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு பரவுவது அதிகரித்து வருவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

நோய்ப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க நிறுவனங்களை அறிவுறுத்தும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அறிவிப்பொன்றை விடுக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல் பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை இணைத்து இது தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

# நீதியரசர்கள் குறித்து ரிஷாத் MP பொய் குற்றச்சாட்டு முன்வைப்பு

### மிக பாரதூரமானது, வருத்தம் தெரிவிக்கவேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நீதிபதிகள் தொடர்பில் அடிப்படையற்ற பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் நீதி அமைச்சர் என்ற வகையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது தமது பொறுப்பாகுமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் நீதியரசர் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டை சபையில் முன் வைத்துள்ளார். இது மிகப் பாரதூரமானது. அவர் அதனை திருத்திக் கொள்ள வேண்டும் அல்லது அதற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் முன்வைத்த விசேட கூற்றொன்றுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் :

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டிய எத்தகைய அவசியமும் எனக்குக் கிடையாது.

06

# சட்டத்துக்கு மாறாக எவர் செயற்படினும் கைதாகுவர்

### முரண்பாடுகளுக்கு வழி வகுக்கவேண்டாம்; அமைச்சர் டிரான்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

முரண்பாடுகளுக்கு வழி வகுக்காமல் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு மதிப்பளித்து செயற்படுமாறும், இதுவே நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எவரும் சட்டத்திற்கு மாறாக முறையற்ற விதத்தில் செயற்பட்டால், அவர்கள் கைது செய்யப்படுவார்களென சபையில் தெரிவித்த அவர், பிரபாகரனின் பிறந்த தினத்தன்று மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுடனேயே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

06

# கொழும்பு பாதுகாப்பு கவுன்சில் உடன்படிக்கையில் கையெழுத்திட அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு பாதுகாப்பு கவுன்சில் உடன்படிக்கை, புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் தலைமையக ஒப்பந்தத்தில் கையொப்பமிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்து சமுத்திரத்தின் பிராந்தியப் பாதுகாப்பு உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் பொதுவான பாதுகாப்புக்குள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்காக உறுப்பு நாடுகளின் பெறுமதிகளுக்கு மதிப்பளித்து இயங்கும் ஒரு கவுன்சிலாக கொழும்பு பாதுகாப்பு கவுன்சில் தாபிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இக்கவுன்சிலில் இந்தியா, மாலைதீவு, மொரிசீயஸ் மற்றும் இலங்கை போன்ற நாடுகள் உறுப்பு நாடுகளாகவும், பங்களாதேஷ் மற்றும் சீஷெல்ஸ் அவதானிப்பு நாடுகளாகவும் செயலாற்றுகின்றன.

இக்கவுன்சிலின் பணிகளை மிகவும் முறைமைப்படுத்த உடன்படிக்கையில் கையொப்பமிடவும், கொழும்பு நகரில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இவ்வமைப்பின் செயலகத்துக்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுப்பு நாடுகளிடையே கையொப்பமிடுவதற்கும், செயலகத்தின் பணிகளுக்குரிய தலைமையக ஒப்பந்தமொன்றில் இலங்கை மற்றும் தலைமையக ஜெனரலுக்கும் இடையே கையொப்பமிடுவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# பௌத்தர்களின் உற்ற நண்பர்களாக இருக்கவே தமிழர் விரும்புகின்றனர்

### சபையில் செல்வராசா கஜேந்திரன் எம்.பி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தமிழர்கள் பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்ல. சிங்கள மக்களின் உண்மையான நண்பர்களாகவே வாழ விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

நாம் பௌத்த மதத்தை நேசிக்கிறோம். பௌத்த மக்களை நேசிக்கின்றோம். பௌத்தர்களின் உண்மையான நண்பர்களாக இருக்கவே விரும்புகிறோம். நாம் ஒருபோதும் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

06


**சிவ வண அரண மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

ஷரித ஹேரத் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், "சிவ வண, அரண மன்றம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்

பின்வரும் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்-

(அ) பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்;

(ஆ) சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்களை செயற்படுத்தல்

(இ) இலங்கை வாழ் சகல இனங்களுக்கிடையில் சமாதானம் நல்லெண்ணம், பரஸ்பர உறவு மற்றும் ஒத்தாசை போன்றவற்றை வளர்த்தல்

பிறவும்

ஷரித ஹேரத்
பாராளுமன்ற உறுப்பினர்


# வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காலநிலை தொடர்பான அறிவிப்பு மற்றும் எச்சரிக்கைகளை உரிய முறையில் வெளிப்படுத்தும் வகையில் "ட்ரொப்லர் ரேடா" கருவி ஒன்றை புத்தளம் பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், மதுர விதானகே எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எமது நாடும் தொடர்ந்து எதிர் கொண்டு வருகிறது. அதேவேளை மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புகளும் இடம் பெறுகின்றன. அந்த வகையில் வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொழில்நுட்ப ரீதியில் நாம் 25 வருடங்கள் பின்னடைவு நிலையிலேயே உள்ளோம்.

06


பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு நீங்கள் தயாராகின்றீர்களா?

இந்த code ஐ ஸ்கான் செய்து கணிப்பிட்டு கண்டறியுங்கள்

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்


# விசேட தேவையுடையோர் நிவாரண சேவை மத்திய நிலையம் திறப்பு



இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான கொழும்பு "புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "விசேட தேவையுடையோர் நிவாரண சேவை மத்திய நிலையம்" போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸின் பணிப்புரையின் பிரகாரம், இ.போ.ச அபிவிருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி பிரிவு மற்றும் சிவில் பொறியியல் பிரிவினால் இதன் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

டிசெம்பர் 03ஆம் திகதி உலக விசேடதேவையுடையோர் தினத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் இலங்கை பாராளுமன்றத்தின் விசேடதேவையுடையோர் சமூகத்துக்கான நிவாரண ஆலோசனைக் குழுவின் ஆலோசனையையும் இலங்கை விசேட தேவையுடையோர் நிவாரண ஆணைக்குழுவின் வழிகாட்டலையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக, பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச மற்றும் அதிகாரிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.


**இலங்கை வங்கி**

**சாய்ந்தமருது வரையறுக்கப்பட்ட சேவை கிளைக்குப் பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தேவையாகவுள்ளது.**

**உத்தேசக் கட்டிடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டிடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடத்திற்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 30 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- நான்கு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான வாகனத் தரிப்பிட வசதி
- குறைந்தபட்சம் 600 - 1500 சதுர அடி தரைப் பரப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மூன்று நிலை மின்சாரம் 30Amp, நீர் வசதிகள், இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு, ஆண், பெண் இரு பாலாரும் பயன்படுத்தக்கூடிய மலசலகூட வசதிகள், அவசர வெளியேற்றக் கதவுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்கு தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- கட்டிடத்தின் பின்புறம் 100 சதுர அடி (10'x10') அளவிலான மின்பிறப்பாக்கி அறையொன்று காற்றோட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இதற்கு தனியான பாதை இருத்தல் வேண்டும்)
- வலது குறைந்தோருக்காக விசேட நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- நீரை சேமித்து வைப்பதற்கு 1000 லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தின் பின்புறக் கதவு மற்றும் ஜன்னல்களுக்கு முறையாக கிறில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டிடத்திற்காகத் தீக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைபடப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சாய்ந்தமருது வரையறுக்கப்பட்ட சேவை கிளைக்குப் பொருத்தமான கட்டிடம்'' எனத் தயவு செய்து குறிப்பிடவும்.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**(கிழக்கு மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**கிழக்கு மாகாண அலுவலகம்,**
**இல. 455, பிரதான வீதி,**
**திருகோணமலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



**சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை**

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **19/12/2023**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **20/12/2023**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **21/12/2023**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
SINGER FINANCE
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 22

## குறள் தரும் சிந்தனை



துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று

உண்ண, உடுத்த ஏதும் இல்லாதவர் இல்லறத்தை முழுமையாகத் துறந்து விடாதிருப்பது, பிறர் வீட்டில் இருக்கும் உப்புக்கும் கஞ்சித் தண்ணீருக்கும் எமனாம்.

# பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் சுற்றுலாத் துறை

சுற்றுலாத் துறையினரைப் பெரிதும் கவர்ந்திழுக்கக் கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இந்நாடு, நாலாபுறமும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. அதேநேரம் எழில்மிகு கடற்கரைகளையும் கண்கவர் நீர்வீழ்ச்சிகளையும் நீர்த்தேக்கங்களையும் இயற்கை வனங்களையும் இயக்கையாகவே பெற்றுக் கொண்டுள்ள இந்நாடுவருடத்தின் 365 நாட்களும் சிறந்த சீதோஷண நிலையையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

நீண்ட வரலாற்று பாரம்பரித்திற்கு உரிமை கொண்டாடும் இந்நாடு, ஆரம்ப காலம் முதல் விவசாயப் பொருளாதார நாடாகத் திகழுகிறது. இந்த நிலையில் தனித்துவம் மிக்க நீர்வள நாகரிகத்தை கட்டியெழுப்பிய பெருமையையும் பெற்றுக் கொண்டிருக்கின்றது இந்தத் தேசம்.

இவ்வாறு உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய பல்வேறு வளங்களையும் இயற்கையாகவே இந்நாடு பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில்தான், இலங்கையைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு உல்லாசப் பயணத்துறையைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ள முடியும்' எனப் பொருளதாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அது முற்றிலும் உண்மையான கூற்றாகும். உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் அமையப் பெற்றுள்ள வளங்களை ஒழுங்குமுறையாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் பயன்படுத்த வேண்டும். அதன் ஊடாக பெருமளவிலான அந்நிய செலாவணியை நாட்டுக்கு ஈட்டிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அது நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பவதற்கு பாரிய பங்களிக்கும் துறையாக மாறும்.

இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையை பொருளாதாரத்திற்கு மேலும் பங்களிக்கும் வகையில் மேம்படுத்த வேண்டிய தேவையும் காணப்படவே செய்கிறது.

அதேநேரம் கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதன் விளைவாக நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் கொதி நிலையின் பின்புலத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்தது. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் வெறும் 29 ஆயிரத்து 802 உல்லாசப் பயணிகள் மாத்திரம்தான் இந்நாட்டுக்கு வருகை தந்தனர். அவ்வருடம் இந்நாட்டுக்கு வருகை தந்த மொத்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையே வெறும் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 ஆகும்.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடத்தின் ஜுலை மாதத்தின் பின்னர் விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயனளிக்கத் தொடங்கின.

அதன் விளைவாக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இந்நாட்டுக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையில் மாதா மாதம் அதிகரிப்பு ஏற்படத் தொடங்கியது. இதற்கேற்ப இவ்வருடம் ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் இந்நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இவ்வருடத்தின் மே மாதம் தவிர்ந்த எல்லா மாதங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இவ்வாறான அதிகரிப்பை அவதானிக்க முடிகிறது. இதனை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இதன்படி இவ்வருடத்தின் இற்றை வரையான காலப்பகுதியில் இந்நாட்டுக்கு அதிகூடிய எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த மாதமாக நவம்பர் பதிவாகியுள்ளது. இம்மாதத்தில் ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 496 உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இவ்வருடத்தின் முதல் 11 மாதங்களிலும் 13 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தந்திருப்பதாகவும் அந்த அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே இவ்வருடம் நிறைவடையும் போது கடந்த வருடத்தை விடவும் இரு மடங்கு உல்லாசப் பயணிகள் வருகை தந்த ஆண்டாக இவ்வருடம் பதிவாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதனால் இந்நாட்டின் சுற்றுலாத்துறையை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கேற்ப சுற்றுலாத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்த வேண்டும். அதன் ஊடாகபுதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாகும். அது வேலையின்மையைக் குறைக்க உதவும் துறையாகவும் மாறும். அப்போது இந்நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிக்கும் முக்கிய துறையாக சுற்றுலாத் துறை திகழும் என உறுதிப்படக்கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# உலகின் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் நால்வர் இந்தியர்கள்

அமெரிக்காவின் பிரபல ஃபோர்ப்ஸ் இதழ் இந்தாண்டுக்கான உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தியாவில் இருந்து 4 பெண்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அமெரிக்காவில் வெளியாகும் பிரபல வணிக இதழான ஃபோர்ப்ஸ் ஒவ்வொரு ஆண்டும் உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி இப்போது 2023ஆம் ஆண்டுக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், ஊடக பிரபலங்கள் எனப் பலரும் இடம் பெற்றுள்ளனர்.

ஃபோர்ப்ஸ் பத்திரிகை 20ஆவது ஆண்டாக இவ்வருடமும் இப்பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

அவரைத் தொடர்ந்து ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் கிறிஸ்டின் லகார்ட் இரண்டாவது இடத்தில் உள்ளார். அதேபோல அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் மூன்றாவது இடத்தில் உள்ளனர். அமெரிக்கப் பாடகி டெய்லர் ஸ்விஃப்ட் ஐந்தாவது இடத்தில் இருக்கிறார். பொழுதுபோக்குத் துறையில் இருக்கும் ஒருவர் உச்சமான 5 இடங்களுக்குள் வருவது இதுவே முதன்முறையாகும். கடந்த 2022இல் 79 ஆவது இடத்தில் இருந்து ஸ்விப்ட் ஒரே ஆண்டில் 5ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அவர் சமீபத்தில் நடத்திய ஈராஸ் இசைப் பயணம், மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற நிலையில், அவரது சொத்து மதிப்பும் $1.1 பில்லியனை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.



## ஒருவர் அமைச்சர் நிர்மலா சீதாராமன்

இப்பட்டியலில் இந்தியாவில் இருந்து மொத்தம் 4 பெண்கள் இடம்பிடித்துள்ளனர். குறிப்பாக நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தியாவில் சக்திவாய்ந்த பெண்ணாக இருக்கிறார். அவர் இந்த பட்டியலில் 32ஆவது இடத்தில் உள்ளார்.

அதேபோல எச்.சி.எல் கோர்ப்பரேஷன் பிரதம நிறைவேற்று அதிகாரி ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா (60வது இடம்), ஸ்டீல் அத்தாரிட்டி ஓஃப் இந்தியா தலைவர் சோமா மொண்டல் (70 ஆவது இடம்), மற்றும் பயோகான் நிறுவனர் கிரண் மஜும்தார்ஷா (76 இடம்) ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

நிர்மலா சீதாராமன் கடந்த 2019 மே மாதம் மத்திய நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார். கோர்ப்பரேட் விவகார அமைச்சகத்தையும் அவரே கவனித்து வருகிறார். தீவிர அரசியலில் வருவதற்கு முன்பு அவர் இங்கிலாந்தின் வேளாண் பொறியாளர்கள் சங்கம் மற்றும் பி.பி.சி உலக சேவை ஆகியவற்றில் இருந்ததாக ஃபோர்ப்ஸ் இதழ் தெரிவித்துள்ளது. அதேபோல தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினராகவும் அவர் இருந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

# கரிகாற்சோழன் விருது பெற்ற இலங்கை, அவுஸ்திரேலியா எழுத்தாளர்கள்

தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையில், சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை நிறுவியுள்ள தமிழவேள் கோ. சாரங்கபாணி இருக்கை வாயிலாக வழங்கப்படும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளைச் சேர்ந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கான கரிகாற்சோழன் விருதுகள் வழங்கும் விழா கடந்த 05 ஆம் திகதி நடைபெற்றது.

இம்முறை இந்த விருதுகள் இலங்கையரான, தற்போது அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் – விலங்கு மருத்துவர் நொயல் நடேசன் எழுதிய 'பண்ணையில் ஒரு மிருகம்' நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை எழுத்தாளர் சிவஆரூரன் எழுதியுள்ள 'ஆதுரசாலை' என்ற நாவலுக்கும் விருது வழங்கப்பட்டுள்ளது.

சான்றிதழும் தங்கப்பதக்கமும் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் பெற்றுள்ளனர்.

நொயல் நடேசன் சிறுகதை, நாவல், பயண இலக்கியம் மற்றும் விலங்கு மருத்துவம் தொடர்பான புனைவு படைப்புகள் பலவும் எழுதியிருப்பவர். இவரது சில நூல்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்துள்ளன.

சிவ. ஆரூரன் சில வருடங்கள் இலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு, பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டவர்.

சிறையிலிருந்தவாறே இலக்கியப்பிரதிகள் எழுதியிருக்கும் சிவஆரூரனின் 'ஆதுரசாலை' நாவலுக்கு இலங்கையில் தேசிய சாகித்திய விருதும் கிடைத்திருக்கிறது.





லெ.முருகபூபதி...
அவுஸ்திரேலியா

# இனங்களிடையே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முஸ்லிம் அமைப்புகளின் ஏற்பாட்டில் நிகழ்வுகள்



இனங்களிடையே நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வுகளை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையினர், முஸ்லிம் மகளிர் அமைப்புக்கள், வை.எம்.எம்.ஏ, வை, டபிள்யூ. எம். ஏ அமைப்பு, பள்ளிவாசல் சம்மேளனம் போன்ற முஸ்லிம் அமைப்புகள் அண்மைக் காலமாக நடத்தி வருகின்றன.

இதன் அடிப்படையில் பதுளை பெரியபள்ளிவாயல், உலமா சபையினர், வை.எம்.எம்.ஏ அமைப்பினர், வை,டபிள்யூ. எம்.ஏ அமைப்பினர் இனங்களுக்கிடையேயான 'நல்லிணக்கத்திற்கு உதவும் கரம்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த இஸ்லாம் தொடர்பான நிகழ்வுகள் பதுளை பெரிய பள்ளிவாசலில் அண்மையில் நடைபெற்றன.

இதன் போது முஸ்லிம்களின் நம்பிக்கை, கலாசாரம், கலை, வீட்டுப் பாவனை பொருட்கள், சுத்தம், சுகாதாரம், அழகுபடுத்தல், அரபு எழுத்தணி, பள்ளிவாயல் சூழல், தொழுகை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

முஸ்லிம்கள் காலமான பின்னர் இடம்பெறும் சடங்குகள், குளிப்பாட்டல் மற்றும் மைய அடக்கம் தொடர்பான விளக்கவுரைகளும் செயல்முறைகளும் குறித்து அங்கு விளக்கமளிக்கப்பட்டது. முஸ்லிம்களின் அன்றாட விடயங்கள் இங்கு நட்புரீதியாக கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வேறு மதத்தவர்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் "இத்தகைய நிகழ்வானது மதங்கள் தொடர்பான புரிந்துணர்வை எமக்கு ஏற்படுத்தியுள்ளது" என்று குறிப்பிட்டனர்.

"இனங்களிடையே முறுகல் நிலையை ஏற்படுத்துவோருக்கு இவ்வாறான நிகழ்ச்சி மூலம் மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.இனிமேலும் இனங்களிடையே முறுகல் நிலை ஏற்படாதிருக்க நாம் திடசங்கற்பம் பூண வேண்டும். நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை அனைத்துப் பள்ளிவாசல்களிலும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் இந்நாட்டின் இனங்களிடையே ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்பு உண்டு" எனவும் அந்நிகழ்வில் பங்கேற்றோர் தெரிவித்தனர்.

இதுபோன்ற உணர்வுபூர்வமான நிகழ்வு நாடு பூராவும் உள்ள பள்ளிவாசல்களிலும் இஸ்லாமிய நிலையங்களிலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பதே இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இவ்வைபவத்தில் பதுளை வைத்தியசாலை டொக்டர்கள், தாதியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பௌத்த, இந்து, கத்தோலிக்க மதகுருமார், பொலிஸ் உயர் அதிகாரிகள் என நூற்றுக்கும் மே ற்பட்டவர்கள் கலந்து கொண்டதுடன், இஸ்லாம் தொடர்பான பல்வேறு சந்தேகங்களுக்கான விளக்கமும் தெளிவும் வழங்கப்பட்டமை குறிப்படத்தக்கதாகும்.

தேசமான்ய
எம்.ஏ.எம்.ஹசனார்... (ஜே.பி)
(ஊவா சுழற்சி நிருபர்)

# லண்டனில் நெடுங்கேணி கல்வி அபிவிருத்தி சங்கத்தின் ஆண்டுவிழா

'நெடுங்கேணி பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளாக அப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியன. பிரித்தானியாவில் வாழும் நெடுங்கேணி பிரதேச மக்களும் ஏனைய நலன்விரும்பிகளும் ஒருங்கிணைந்து, தாயகத்தில் தம் பிரதேச நலனை முன்னெடுப்பதில் காண்பித்து வரும் அக்கறையைப் பாராட்டுகிறேன். கடந்த இருபது ஆண்டுகளாக பிரித்தானியாவில் மருத்துவராகப் பணியாற்றி வரும் அனுபவத்திலிருந்து, நெடுங்கேணி பிரதேசத்தின் சுகாதார, மருத்துவ வசதிகளிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.'

இவ்வாறு கடந்த லண்டன் உயற்குன்று முருகன் ஆலய மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்ற நெடுங்கேணி கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய வைத்திய கலாநிதி ஜெய்சன் விவேகானந்தராஜா தெரிவித்தார்.

'முப்பது ஆண்டுகால யுத்தத்தால் பேரிழப்புகளைச் சந்தித்த நெடுங்கேணி பிரதேசம் இன்று சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது. கல்வி, தொழில், குடும்பநலன் போன்ற விடயங்களில் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை மேற்கொள்ள பிரித்தானியாவாழ் நெடுங்கேணி பிரதேச நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து உதவ முன்வர வேண்டும்' என்று நெடுங்கேணி பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாள செ.கருணாகரன் தனதுரையில் வேண்டுகோள் விடுத்தார்.





கல்வி வளர்ச்சிக்கு வழங்கிவரும் ஆதரவுக்கு பலரும் பாராட்டு



'நெடுங்கேணி பிரதேசத்தின் ஆரம்பநிலைக் கல்வியை முன்னேற்றும் செயற்பாடுகளிலும் ஆங்கிலமொழி அறிவினை மேம்படுத்தும் திட்டத்திலும் சில அடிப்படைச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பினை வழங்குவோம்' என்று வடமாகாண முன்பள்ளிச் சம்மேளனத்தின் இயக்குனர் சச்சிதானந்தன் தெரிவித்தார்.

நெடுங்கேணி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் காப்பாளர் திருமதி தமிழரசி அன்பழகன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டுமலரை அறிமுகப்படுத்தி உரையாற்றியபோது, 'கடந்த ஆண்டு நெடுங்கேணி மகாவித்தியாலத்திலிருந்து பதினொரு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லுமளவிற்கு எங்கள் பாடசாலை வளர்ந்து வருவதில் நாம் பெருமை அடைகிறோம். நெடுங்கேணியுடன் ஊஞ்சார் கட்டி, மருதோடை, பழம்பாசி, ஆயிலடி ஆகிய கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். பல்கலைக்கழகத்தில் நமது மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரவும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கவும் எமது சங்கம் உதவி வருகிறது' என்று குறிப்பிட்டார்.

நெடுங்கேணி பிரதேசக் கல்வி அபிவிருத்திச் சபை ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி கலாநிதி ச.பரமலிங்கம் ஆண்டுமலரை வெளியிட்டுவைத்துப் பேசுகையில், 'வவுனியா வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் எழுபது ஆயிரம் ஏக்கர் நிலத்தை கரும்புப் பயிர்ச் செய்கைக்காக கம்பெனிகளுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கானசெய்திகள்எமக்கு கவலை அளித்தன' என்று தெரிவித்தார்.

'கலைவளம் மிக்க வன்னிப் பிரதேசத்தின் வாய்மொழி வழக்காறுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று திருமதி சுகந்தி தமிழ்வாணன் குறிப்பிட்டார்.

இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தன் 'நெடுங்கேணி இளங்கதிர் 2023' ஆண்டுமலரை மதிப்பீடு செய்து உரையாற்றுகையில், 'சிறந்த ஆய்வேடாகவும், குரலற்றோர் குரலாகவும், நெடுங்கேணி மகாவித்தியாலயத்தின் செயற்பாட்டுத் தளமாகவும் திகழும் இம்மலர் பேராசிரியர் இர.சிவச்சந்திரன், கலாநிதி ச.பரமலிங்கம், கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி, நெடுங்கேணி சானுஜன், திருமதி விமலா ரவீந்திரன், சுகந்தி தமிழ்வாணன் ஆகியோரின் தரமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருப்பது சிறப்புக்குரியது. பின்தங்கிய பிரதேசம் ஒன்றின் மேம்பாட்டுக்காக பிரித்தானியாவாழ் நெடுங்கேணி மக்கள் காட்டி வரும் அக்கறை பாராட்டுக்குரியது' என்று தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

LSC

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### செவனகல சீனித் தொழிற்சாலைக்கு குளிர்விப்பு கோபுரம் (Cooling Tower) வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்துவதற்கான தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல்

### (PR-10576) - Recall

**செவனகல சீனித் தொழிற்சாலைக்கு குளிர்விப்பு கோபுரம் (Cooling Tower) வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்துவதற்கான** ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக்குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி **2023 டிசம்பர் 27** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை **2023 டிசம்பர் 28** ஆம் திகதி **14.00 மணிக்கு தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“செவனகல சீனித் தொழிற்சாலைக்கு குளிர்விப்பு கோபுரம் (Cooling Tower) வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்தல் கேள்விமனுக்கோரல்”** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து மனுக்களுக்கும் **“மனுப்பாதுகாப்பு” ரூ.300,000.00 (மூன்று இலட்சம் ரூபாய்)** இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **119 நாட்களுக்கு** செல்லுபடியாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (கொள்முதல்) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி : +94 11 2584184 , +94 77 0103359, தொலைநகல் :+94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

SELACINE



பெறுகை அறிவித்தல்

## நீர்கொழும்பு மாநகர சபை

நீர்கொழும்பு, செல்பி வீதி, மீபுர திரையரங்கு அமைந்துள்ள காணிக்குப் பின்புறமுள்ள காணி, எண்ணெய் விநியோக நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்கு 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடனான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | குத்தகையிடம் | வருடாந்த ஆகக் குறைந்த தொகை | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | இயைபுடைய காணி, எண்ணெய் விநியோக நிலையமொன்றாக நடாத்திச்செல்லல் | ரூபா 575000.00 + VAT | ரூபா 100000.00 | ரூபா 3000.00 + VAT |

கேள்வி விண்ணப்பப்படிவ விநியோகம் - 2023-12-07ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2023-12-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில்

கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும்

இறுதி நாள் மற்றும் நேரம் - 2023-12-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு

கேள்விப் படிவங்களைத் திறத்தல் - 2023-12-22ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு

1. இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. இந்தக் குத்தகை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு மட்டுமே குத்தகைக்கு வழங்கப்படும்.
3. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. வெற்றிகரமான கேள்விதாரரினால் 06 மாதத்திற்கான கட்டணத்தை வைப்புத் தொகையாக சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.
5. குத்தகை ஆதனத்தில் குத்தகைதாரரினால் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கும் வியாபாரமொன்றை நடாத்திச் செல்லல் வேண்டும்.
6. எரிபொருளை விநியோகித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய இயைபுடைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிப் பத்திரத்தை குத்தகைதாரர் முறையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
7. எரிபொருளை விநியோகித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் குத்தகைதாரர் தமது சொந்த செலவில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
8. உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு (வைப்புப் பற்றுச்சீட்டின் நகல்பிரதியுடன்) அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘மீபுர திரையரங்கு அமைந்துள்ள காணிக்கு பின்னாலுள்ள காணியில் எரிபொருள் விநியோக நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக குத்தகைக்கு பெற்றுக்கொள்ளும் விலைக்கோரல்’’ எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களை 031-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மாநகர கணக்காளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.
9. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.
10. இந்த கேள்வி கோரல் தொடர்பில் மாநகர ஆணையாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**2023-12-04ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**



விலைமனுக்கோரல்

## தேசிய பாதுகாப்பு கல்லூரி

**இல.544, காலி வீதி, கொழும்பு 03.**

### வாடகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

**ஒரு வருட காலத்திற்கு குறைந்தபட்சம் 50 சிரேஷ்ட அதிகாரிகள் தங்கக்கூடிய தங்குமிட வசதியிலான அடுக்புகுமாடி குடியிருப்பு பின்வரும் வசதிகளுடன் காணப்படல் வேண்டும் மற்றும் மீள் நீட்டிப்பு அடிப்படையில் 03 ஆண்டுகளாகும்**

**ஒப்பந்த இலக்கம் : NDC/PROC/BOARD/49/2023**

பாதுகாப்பு அமைச்சின் கொள்முதல் குழுத் தலைவரினால் மேற்கூறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

- தேசிய பாதுகாப்பு கல்லூயிலிருந்து 10 கி.மீ தொலைவில் இருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் 02 அறைகளுடனான “அடுக்குமாடி” (Apartment) குடியிருப்புகள் குறைந்தபட்சம் 18-24 அல்லது 25 அறைகளை (Rooms) கொண்ட கட்டிடமாக இருக்க வேண்டும்.
- ஒரு வீடு 800–1250 சதுர அடிக்கு இடையில் இருத்தல் வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 02 குளியலறைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
- சமையலறை மற்றும் சாப்பாட்டு அறை இருத்தல் வேண்டும்.
- அனைத்து அறைகளும் குளிரூட்டப்பட்ட / மின்விசிறிகளுடன் இருத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு வேலி/சுவர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்
- அனைத்து வீடுகளுக்கும் தனித்தனி மின்சாரம் மற்றும் தண்ணீர் மீட்டர் இருத்தல் வேண்டும்.
- மின்துண்டிப்பு ஏற்பட்டால் கட்டிடம் முழுவதும் மின்சாரம் வழங்க மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- கட்டிடம் முழுமையாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
- 15-20 இலகுரக வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி காணப்படல் வேண்டும்.
- மேற்படி குடியிருப்பு வசதிகளைப் பெறும் சிசேஷ்ட அதிகாரிகளின் வாகன ஓட்டுநர்களுக்கு தங்குமிட வசதியினை பெற்றுக்கொள்வதற்கு (Driver Accommodation) பொருத்தமான முறையில் (மின் விசிறிகள், பொதுவான குளியலறைகள், மலசலக்கூட வசதியுடன்) கட்டிடத்தில் போதுமான இடம் இருத்தல் வேண்டும்.
- தண்ணீரை சேமித்து வைப்பதற்கான அளவான தண்ணீர் தொட்டி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- தங்கும் அறைகள் பின்வரும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- மனு ஆவணங்களை வழங்கும் போது மீள்செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.20,000/= னை** பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் செலுத்தப்பட வேண்டும் மேலும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை விலமனுக்கள் கோரப்படும் போது மனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
- வணிக வங்கியொன்றிலிருந்து **ரூ.1,080,000.00** பெருமதியான மனுப் பாதுகாப்பு பிணையினை பெற்றிருக்க வேண்டும். **(2023.12.28** ஆம் திகதி முதல் **2024.03.27** ஆம் திகதி வரை இருக்க வேண்டும்)
- மேலதிக தகவல்களுக்கு விசாரணைகள்: லெப்டினன்ட் கேணல் ஏஎம்ஆர்எச்பி அபேசிங்க **USP - 077 071 7559 / 011 232 7061**

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய பொருட்கள்

| S/No | Item | Quantity |
|---|---|---|
| 1 | Refrigerator | 01 |
| 2 | Washing Machine | 01 |
| 3 | Living Room Furniture | 01 |
| 4 | TV 32” | 01 |
| 5 | Dining table | 01 |
| 6 | Dining chairs | 04 |
| 7 | Microwave Oven | 01 |
| 8 | Gas Cooker | 01 |
| 9 | Cutlery for dinning and preparing tea (for four individuals) | |

| S/No | Item | Quantity |
|---|---|---|
| 10 | Bed Double with mattress | 01 |
| 11 | Almirah | 01 |
| 12 | Writing table | 01 |
| 13 | Writing chairs | 01 |
| 14 | Bed side Cupboard | 01 |
| 15 | Book rack | 01 |

மனு ஆவணங்களை **2வது மாடி, தலைமை நிதி அதிகாரியின் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சின், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் 2023.12.07** ஆம் திகதி முதல் **2023.12.27** ஆம் வரை வாரத்தின் வேலை நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணிவரை பெற்றுக்கொள்ள முடியும், கொண்டுசெல்ல வரும் நாளுக்கு முன் தலைமை நிதி அதிகாரி அலுவலகத்திலிருந்து வருகைதரும் நபர்களின் விவரங்களைக் குறிப்பிட்டு நுழைவு அனுமதி பெற வேண்டும். தொலைபேசி : **011-2390719,** தொலைநகல் **011-2390720** மற்றும் மின்னஞ்சல் முகவரி : **procurement@defence.lk**

**அசல் மற்றும் நகல்** என குறிப்பிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட மனு ஆவணங்கள் தனித்தனி உறைகளில் இட்டு அந்த கடித உறைகளின் மேல் இடது பக்க மூலையில் **“தேசிய பாதுகாப்பு கல்லூரி கட்டிடங்கள் குத்தகைக்கு வழங்கல்”** எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட தனியொரு உறையில் இட்டு **2023.12.28** ஆம் **திகதி மு.ப.10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக டெண்டர் பெட்டியில் இடல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

மனு ஏற்றுக்கொள்ளல் **2023.12.28** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு நிறைவடைவதுடன், அதே தினத்தில் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு,
பாதுகாப்பு அமைச்சு,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை.

SELACINE



அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சு

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை

JEDB

## பச்சையிலை விற்பனை மற்றும் இறப்பர் பால் விற்பனைக்கான கேள்வி

### 2024 ஜனவரியிலிருந்து மார்ச் வரையிலானது

➤ **பின்வரும் பெருந்தோட்டங்களிலிருந்து மூன்று மாத காலஎல்லைக்கு (2024 ஜனவரியிலிருந்து மார்ச் வரை) பச்சையிலைக்கான விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.**

| பெருந்தோட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 ஜனவரி | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 பெப்ரவரி | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 மார்ச் | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா. சதம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா. சதம் |
|---|---|---|---|---|---|
| கிறேட்வெலி/ போபிட்டிய | 24,420 | 24,420 | 34,900 | 5,000 | 100,000 |
| தெல்தொட்ட | 25,500 | 26,500 | 27,000 | | |
| கோல்பொத்தே | 25,400 | 25,400 | 25,400 | | |
| ஹந்தான | 48,500 | 47,200 | 62,300 | | |
| ஹோப் | 66,667 | 62,222 | 97,778 | | |
| கண்டல் ஓயா | 18,200 | 19,500 | 19,500 | | |
| லெவெல்லொன் | 84,000 | 108,000 | 120,000 | | |
| லூலேகொண்டர | 75,000 | 87,000 | 125,000 | | |
| மவுண்ட் ஜீன் | 18,580 | 18,580 | 18,580 | | |
| நாகஸ்தன்ன | 24,000 | 21,000 | 32,700 | | |
| ரஹத்துங்கொட | 17,300 | 21,700 | 30,900 | | |
| ரொக்வுட் | 12,000 | 12,000 | 19,000 | | |

2023 டிசம்பர் 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து கேள்வி ஆவணங்களும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Sale of Green Leaf” என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் தலைவர் - கேள்விக் குழு, ஜனதா பெருந்தோட்டங்கள் அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷால் ஒழுங்கை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

➤ **பின்வரும் பெருந்தோட்டங்களிலிருந்து மூன்று மாத காலஎல்லைக்கு (2024 ஜனவரியிலிருந்து மார்ச் வரை) இறப்பர் பாலின் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.**

| பெருந்தோட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 ஜனவரி | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 பெப்ரவரி | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2024 மார்ச் | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) - ரூபா. சதம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா. சதம் |
|---|---|---|---|---|---|
| குமாரவத்த | 39,457 | 35,382 | 33,567 | 5000 | 100,000 |
| டியலும | 3,550 | 3,050 | 2,950 | | |

2023 டிசம்பர் 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து கேள்வி ஆவணங்களும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Sale of Latex” என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் தலைவர் - கேள்விக் குழு, ஜனதா பெருந்தோட்டங்கள் அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷால் ஒழுங்கை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோரல்களுக்கான சமர்ப்பித்தலுக்கான விலைமனு படிவங்கள் அடங்கலான கேள்வி ஆவணங்களுடனான நிபந்தனைகள் 2023 டிசம்பர் 20 ஆம் திகதி வரையும் ஆவணக் கட்டணமான 5,000 ரூபாவை (ஐந்தாயிரம்) எந்தவொரு வேலை நாளிலும் கொழும்பு-02, வொக்ஷால் ஒழுங்கை, 55/75, ஆம் இலக்கத்திலுள்ள ஜனதா பெருந்தோட்டங்கள் அபிவிருத்தி சபையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுப் பிணையான 100,000 ரூபாவை ஹையிட் பார்க் இலங்கை வங்கியின் எமது 2327555 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவிடுவதன் மூலம் செலுத்தப்படலாம் அல்லது ரொக்கப் பணத்தில் JEDB தலைமையலுவலகத்திற்கு ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் வரவுத் துண்டை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகள் 2023 டிசம்பர் 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு JEDB தலைமையகத்தில் மூடும் நேரத்தின் பின்னர் கேள்வி திறத்தல் குழுவின் முன்னிலையில் திறக்கப்படுவதுடன் கொள்வனவுக்காரர் அல்லது அவரது பிரதிநிதியானவர் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். JEDB ஆனது தாமதமாகும் விலைமனுக்கோரல்கள் தொடர்பான எந்தவொரு பொறுப்பையும் ஏற்க மாட்டாதென்றும் பெறுகைக் குழுத் தலைவரானவர் கேள்வியை இரத்துச் செய்வதற்கான உரிமையையும் கொண்டுள்ளார்.

(011-4758623 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தயவு செய்து நிர்வாக உதவியாளருடன் எந்தவொரு தகவலுக்கும் தொடர்பு கொள்ளவும்)

**தலைவர்,**
**ஜனதா பெருந்தோட்டங்கள் அபிவிருத்தி சபை.**

## நாட்டின் முன்னேற்றப் பாதைக்கான...

நேற்று (06) நடைபெற்ற அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இங்கு பேசிய அவர்;

18 மாதங்களில் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டுள்ளோம்.இதற்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர் சமூகம் மேற்கொண்டுள்ள பணிகளை பாராட் ட முடியும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியான முறையில் நிர்வகிக்காவிட்டால் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும். நிலையான பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு கொண்டு செல்ல புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

உலகப் பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் வங்குரோத்து நிலையை அடைந்த நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை விரைவாக மீண்டு வர முடிந்துள்ளதாக உலக நிதி நிறுவனங்கள் கூட ஒப்புக்கொள்கின்றன.

மதிப்பீட்டுத் துறை செயல்முறை போர்த்துகேயரின் காலனித்துவக் காலத்துக்கு முந்தையது. பிரிட்டிஷ் காலத்தில், கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீடு செயல்முறை முன்னோக்கி கொண்டு வரப்பட்டது. 1923 இல், மதிப்பீட்டாளர் பதவி உருவாக்கப்பட்டது.

1972 இல் அறிமுகப்படுத்தப்பட்ட நிலக் கொள்கையின் மூலம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பங்கு மேலும் விரிவாக்கப்பட்டது. அதன்படி, மதிப்பீட்டுத் திணைக்களம் தற்போது புதிய யுகத்தில் நுழைந்துள்ளது. அங்கு டிஜிட்டல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது. டிஜிட்டல் பொருளாதாரத்தில் மதிப்பீடுகளுக்கு மனிதவளம் தேவைப்படுகிறது. அதற்காக மதிப்பீட்டாளர்களை உருவாக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை உள்வாங்குவதை அதிகரிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சொத்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வரி வசூலிக்கும் முறைக்கு மதிப்பீட்டின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. எனவே, இந்த ஆண்டு முதல் மதிப்பீட்டு செயல்முறை டிஜிட்டல் மயமாக்கப்படுவதை வரவேற்கிறேன்.

இம்மாத நடுப்பகுதியில், நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவிக்க உள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த புதிய பொருளாதார முறைகளின்படி முன்னேற வேண்டும். அப்படி இல்லாமல், பழைய பொருளாதார முறைகளை அமுல்படுத்தினால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது.

மத்திய வங்கி ஏற்கனவே பணம் அச்சிடுவதை நிறுத்திவிட்டது. அத்துடன் அபிவிருத்திக்காக அரச வங்கிகளில் இருந்து கடன் பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிபந்தனைகள் இல்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது. நாட்டுக்கு நிதி ஒழுக்கம் தேவை. பொருளாதாரத்தை நிதி ஒழுக்கத்துடன் நிர்வகித்தால், எதிர்காலத்தில் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும்.எரிசக்தி துறையிலும் புதிய அணுகுமுறைகள் அவசியம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## 15 / 69 / 1013: தரங்களுக்கான...

இலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (06) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர்,

“2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 280 பில்லியன் ரூபா நிதியுடன் மொத்தமாக 517 பில்லியன் ரூபா இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவர்களையும் சாதாரண பிள்ளைகள் கல்வி கற்கும் வகுப்பறைகளில் இணைத்துக்கொள்ளக் கூடிய வகையில் inclusive education முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

பல்வேறு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் STEAM கல்வியின் மூலம் கட்டமைக்கப்பட்ட மனித வளமாகும். அதேபோன்று, இந்நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த, விஞ்ஞானம், தொழில்நுட்பம் பொறியியல், கலை, கணிதம் ஆகிய துறைகள் மூலம் பிள்ளைகளுக்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட வேண்டியுள்ளது.இதற்காக அவற்றை முன்னுரிமைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முழுமையான கல்விக் கட்டமைப்பையும் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். 15 / 69 / 1013 ஆம் தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்தும் முன்னோடி வேலைத்திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும். மேலும் மாணவர்கள் 21 வயதுக்கு முன்னர் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் வகையில் பாடசாலைப் பரீட்சைகள் நடத்தப்படும். தரங்களை மீள்திருத்தம் செய்யவுள்ளதுடன், 10 ஆம் தரத்தில் சாதாரண தரப் பரீட்சை மற்றும் 12 ஆம் தரத்தில் உயர்தரப் பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் வருடத்தில் பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக 2,535 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதுடன், அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தொற்றாநோயை கட்டுப்படுத்த...

பத்திரன மற்றும் ஜப்பான் குடியரசின் தூதுவர் Mizukoshi Hdeaki தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதற்கான முதற் கட்டமாக AngioCT இயந்திரத்துக்கு தேவையான கருவிகள், கதிரியக்க கருவிகள் (ஆஞ்சியோCT இயந்திரம்), அறுவைச் சிகிச்சை கருவி Unit, கண் கருவிகள் (தானியங்கி) ரிஃப்ராக்டோ மீட்டர் மற்றும் மூன்று ஸ்லிட்லேம்கள், மூன்று தீவிர சிகிச்சை படுக்கைகள் வழங்கப்பட்டன.

ஜப்பான் தூதுவர் Mizukoshi Hideaki, சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரனவிடம் மேற்படி உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக வழங்கினார்.இதை, ஸ்ரீஜயவர்தனபுர பொதுவைத்தியசாலையின் தலைவர்டொக்ர் நிஹால் ஜயதிலகவிடம் சுகாதார அமைச்சர் கையளித்தார். இந் நிகழ்வில் சுகாதார இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல, ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர். ரத்ன சிறி ஏ.ஹேவகே மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர் உட்பட சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## பொத்துவிலுக்கு தனியான கல்வி...

உரையாற்றுகையிலேயே இவ்வாறு அமைச்சர் சுசில் பதிலளித்தார்.அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மு.கா. பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் தனது கேள்வியின்போது,, பொத்துவிலுக்கான கல்வி வலயம் அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.இதனாலேயே பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் தேவைப்படுகிறது. இதனால் அவசரமாக அதனை செய்துதர வேண்டும். பந்துல குணவர்த்தன காலத்திலும்

இதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டது. இதுவும் நடைபெறவில்லை.

அதேநேரம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு சில முக்கிய பீடங்கள் அவசியமாக தேவைப்படுகின்றன. அட்டாளைச்சேனையில் உள்ள ஆசிரியர் கல்வி கலாசாலையில் பல கட்டிடங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளன. அந்த கட்டிடங்களை பயன்படுத்தி அங்கு கல்வி பீடத்தை அமைக்கலாம். அதேபோன்று மல்வத்தை பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு இருக்கின்ற காணியை பாவித்து அங்கு விவசாய பீடத்தை அமைக்கலாம்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் விருப்பமாக இருப்பது, அங்கு உல்லாச பயணத்துறைக்கான ஒரு பீடம் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும்.பொதுத்துவில் அறுகம்பை, பாசிக்குடா பிரதேசங்களுக்கும் அங்குள்ள ஹோட்டல்களுக்கும் தேவையான ஊழியர்களை பயிற்றுவிப்பதற்குமான ஒரு பல்கலைக்கழக கற்கை நெறிகளைக்கொண்ட ஒரு பல்கலைக்கழகமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஒரு பீடம் அமைக்கப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## வடக்கு, கிழக்கின் 28 சிறுவர்கள்...

செல்லப்பட்டுள்ளனர். இதுவரை இச்சிறுவர்கள் நாடு திரும்பவில்லையெனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்தது.

17 வயதுக்குட்பட்ட 28 சிறுவர்கள் தாய்மாருடன் அல்லது தனியாக நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். எனினும்,தாய்மார் மட்டுமே மீளவும் நாடு திரும்பியதாக தெரிய வந்துள்ளது. இந்தியாவிலிருந்து மலேசியா செல்லும் குழந்தைகளை மலேசிய பெண் ஒருவர், அந்நாட்டு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்து அழைத்துச் செல்வதாக தகவல் வெளியாகியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

## 14 மாதங்களில் மட்டும்...

பெற முடிந்துள்ளது. அக்காலப்பகுதியில் 13,52,324 உள்ளூர் மக்களும், 38,597 வெளிநாட்டவர்களும் இதனைக் காண வந்துள்ளதாகவும் லோட்டஸ் டவர் முகாமைத்துவ நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். கொழும்பு தாமரை கோபுர வளாகத்தில் நேற்று (06) காலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து, தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க,

"செப்டம்பர் 15, 2022 அன்று தாமரைக் கோபுரத்தை நாங்கள் பொறுப்பேற்றபோது, உணவகத்தைத் திறக்கும் நிலைமையில் இல்லை. அதற்காக நாங்கள் டெண்டர் கோரினாலும், யாரும் முன்வரவில்லை. அதனால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு திட்டத்தைத் தொடர முடிவு செய்தோம். அதன்படி, முகாமைத்துவ நிர்வாக மாதிரிக்கு சென்றோம். அதன்படி சிட்ரஸ் ஹோட்டல் நிறுவனத்தை தெரிவு செய்தோம்;. உணவகத்தின் லாபத்தில் 80 சதவீதம் தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனத்துக்கும் மீதமுள்ள 20 சதவீதம் சிட்ரஸ் ஹோட்டல் குழுமத்துக்கும் கிடைக்குமாறு நடவடிக்கை எடுத்தோம். 220 மில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளோம்.15 செப்டம்பர் 2022 நேற்று முன்தினம் வரை (05) உள்ளூர் 1,352,324 பார்வையாளர்கள் வந்துள்ளனர். 38,597 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். அவர்களிடமிருந்து மட்டுமே எமக்கு வருமானம் கிடைத்துள்ளது.

## அரச பொறியியில் கூட்டுத்தாபன...

சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அழுத்கமகே இது உண்மையெனில் சஜித் பதவி விலக வேண்டும் என்றும் தெரிவித்தார். இந்த 19 பேரையும், தனது பாதுகாப்பு பணிகளுக்காகவும், அரசியல் பணிகளுக்காகவும் தனது மனைவியின் அழகு நிலைய பணிகளுக்காகவும் சஜித் நியமித்ததாகவும் மஹிந்தானந்த அழுத்கமகே தெரிவித்தார்.

இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பதிலளிக்கையில், கணக்காய்வு அறிக்கையை சபைக்கு சமர்ப்பியுங்கள். அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால், நான் உடனடியாக பதவி விலகுவேன் என்றார். இதன்போது மஹிந்தானந்த எம்.பி. தனது கையில் இருந்த ஆவணத்தை எடுத்துக்காட்டி இதோ, அமைச்சின் உள்ளக கணக்காய்வு அறிக்கை என்னிடம் உள்ளது. இதனை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். நீங்கள் தெரிவித்ததுபோல் தற்போது உடனடியாக பதவி விலகவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக பதவி வகித்த காலத்தில், பத்து பில்லியன் ரூபா நிதியை முறைகேடாக உபயோகித்துள்ளதாக குறிப்பிடும் கணக்காய்வு அறிக்கை உண்மையானதல்ல. இதனை உறுதிப்படுத்துமாறு சவால் விடுவதாக மஹிந்தானந்த அளுத்கமகே எம்பியிடம் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று காணி,சுற்றுலாத்துறை, புத்தசாசனம் மற்றும் கலாசார அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே, மஹிந்தானந்த அளுத்கமகே எம்பி இவ்வாறு தெரிவித்தார். மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் மஹிந்தானந்த அளுத்கமகே எம்பிக்குமிடையில் நேற்று சபையில் வாக்குவாதம் இடம்பெற்றது. இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

## IMF இரண்டாம் தவணை...

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி நடத்தப்பட்டால், நாடு இரண்டாவது கடன் தவணையை 12 ஆம் திகதி பெற்றுக்கொள்ளும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் இரண்டாம் தவணைக்கு உரிமை இல்லை என்றும், கடன் மறுசீரமைப்புக்கு நாடுகள் சம்மதிக்காது என்றும் சிலர் கருத்து தெரிவித்ததாகவும் அவர்தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி நடத்தப்பட்டால், நாடு இரண்டாவது கடன் தவணையை 12 ஆம் திகதி பெற்றுக்கொள்ளும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் இரண்டாம் தவணைக்கு உரிமை இல்லை என்றும், கடன் மறுசீரமைப்புக்கு நாடுகள் சம்மதிக்காது என்றும் சிலர் கருத்து தெரிவித்ததாகவும் அவர்தெரிவித்தார்.

## முன்னாள் DIG நாலக்கவை...

விடுதலை செய்யுமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (06) உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் திறந்த நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, நாலக்க சில்வாவுக்கு எதிராக சா ட்சி யங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.இதனால், அவரை விடுதலை செய்யுமாறு சட்ட மாஅதிபர் ஆலோசனை வழங்கினார். இதற்கமைய குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் சமர்ப்பித்த விடயங்களை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேகநபர் நாலக்க சில்வா, வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது திறந்த நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக இவர் குற்றம்சாட்டப்பட்டிருந்தார்.பின்னர் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## தமிழ் மக்களை புறக்கணிக்கவில்லை...

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

அரசாங்கம் மற்றும் அமைச்சுகள் மதம் மற்றும் மொழி அடிப்படையில் எவரையும் மலினப்படுத்துவதில்லை.பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அரசியலமைப்பின் 09 ஆவது உறுப்புரிமையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அச்சமடைந்துள்ளதை அறிய முடிகிறது. அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் போது, ஏனைய மதங்களை இரண்டாம் பட்சமாக்க வேண்டுமென எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. சகல மதங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொன்மை வாய்ந்த இந்து கோயில்களை புனரமைக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இந்து மத விவகார திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## வலம்புரி சங்கை...

கிடைத்த தகவலின் பேரில், கொள்வனவு செய்பவர்களாக வேடம் பூண்டு வந்த அதிகாரிகள் இச்சந்தேக நபரை கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குர்ஆன் மதரஸாவில் தூக்கில்...

மீட்கப்பட்டார். காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல் வீதி ஹனிபா மௌலவி லேனில் வசிக்கும் 13 வயது எம்.எஸ். முஸ்அப் எனும் மாணவனே சடலமாக மீட்கப்பட்டார். இந்த மத்ரஸாவில் இம்மாணவன் சேர்ந்து இரண்டு மாதங்களாகின்ற நிலையிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மஹ்ரிப் தொழுகையில் இம்மாணவன் கலந்துகொள்ளவில்லை. இவரைத் தேடியபோது, மலசல கூடத்தில் தூக்கில் தொங்கியவாறு மாணவன் மீட்கப்பட்டார்.

மாணவனின் மரணத்தில் சந்தேகமென தெரிவித்த பொது மக்கள் மத்ரஸாவை சுற்றி வளைத்து கூடினர். சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று நிலமையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொதுமக்கள் ஒன்று கூடி குறிப்பிட்ட மதர்ஸாவின் நிர்வாகி மீது தாக்குதல் மேற்கொள்ள தயாராகிய வேளை மேலதிக பொலிஸார் அவ்விடத்துக்கு அழைக்கப்பட்டனர். மத்ரஸா நிர்வாகியான மௌலவி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் பிரேதப்பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. சடலமாக மீட்கப்பட்ட மாணவர் தற்கொலை செய்து உயிரிழந்துள்ளாரா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா? என சந்தேகம் நிலவுவதால் பிரேதப்பரிசோதனை, விசாரணை மற்றும் தடவியல் பொலிஸாரின் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

## நீதியரசர்கள் குறித்து ரிஷாத்... (03 ஆம் பக்கத் தொடர்)

இதற்காக யாராவது என்னை,தூண்டி விட்டிருக்கலாம் என்று அவர் சபையில் குறிப்பிடுகின்றார். அவ்வாறு செயல்படுவதற்கு நான் முன்பள்ளி மாணவரல்ல. அவரது உரையில் நீதியரசரின் பெயரை குறிப்பிடவில்லை என்று அவர் குறிப்பிடுகின்றார். உயர்நீதிமன்ற நீதியரசர்களின் இஸ்லாமிய நீதியரசர் ஒருவரே உள்ளார் என்பதை நான் அவருக்கு குறிப்பிட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தனது உரையில், இஸ்லாமிய நீதியரசர் ஒருவர் உள்ளார். நான் அவரை கண்டதுமில்லை, பேசியதுமில்லை. அவர் முஸ்லிம்களுக்காக வழக்குகளில் ஆஜராகுவதும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து ரிசாட் பதியுதீன் ராஜபக்ஷக்கள் தொடர்பிலும் குறிப்பிட்டார். அந்த நீதியரசர் ராஜபக்ஷக்களுக்கு சார்பாகவும் எதிராவும் தீர்ப்பளிக்கவில்லை. அத்துடன் அவர் ‘ஹெல்பிங் ஹம்பாந்தோட்டை’ வழக்கு தொடர்பில் குறிப்பிட்டார்.நாட்டு மக்கள் இந்த வழக்கை நன்கு அறிவார்கள்.

இந்த வழக்கு தீர்ப்பினால் ரிஷாட் பதியுதீனும் அதிக இலாபமடைந்தார். இந்த தீர்ப்பின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திலேதான், ரிஷாட் பதியுதீன் 10 ஆண்டுகள் அமைச்சராக பதவி வகித்தார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பேர வாவி அபிவிருத்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட நிறுவன பிரதானிகளுக்கு சாகல ரத்நாயக்க அறிவித்தார்.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பேர வாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பேர வாவியை அண்டிய பகுதியை பொது மக்களின் பயன்பாட்டிற்காக அபிவிருத்தி செய்தல், பேர வாவிக்கு திருப்பி விடப்படும் கழிவுநீர் குழாய்களைத் தடுத்தல் மற்றும் வாவியில் உள்ள பாக்டீரியா, பாசிகளின் அளவை குறைத்தல் உள்ளிட்ட திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. மத்திய பேரூந்து நிலையம் மற்றும் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பேரூந்து நிலையம் அமைந்துள்ள காணியை தனியார் துறையினருடன் இணைந்து வர்த்தக செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்தல், கொழும்பு நகரிலுள்ள பாதுகாப்பற்ற மரங்களை அகற்றி, பொருத்தமான மரங்களை நடல், கொழும்பு நகரில் உள்ள கைவிடப்பட்டு, காடாக மாறியுள்ள கட்டிடங்களை அடையாளம் கண்டு பராமரித்தல், கொழும்பு நகர போக்குவரத்து, பயணிகளை ஏற்றிச் செல்வது மற்றும் இறக்குவது தொடர்பான ஒழுங்குமுறைத் திட்டத்தைத் தயாரித்தல், மழைநீர் முறையாக வடிந்து செல்வதற்கு முன்னெடுத்து வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் கொழும்பில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் இலங்கை பொலிஸ், கொழும்பு மாநகர சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் இணைந்து வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.


## இன்றைய பலன்கள்

### ( 07. 12. 2023 )




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)


**மேஷம்:**
உங்கள் பணிகள் பலவற்றில் முன்னேற்றம் பலன்கள் ஏற்பட்டாலும் சில விஷயங்களில் தடைகளும் காணப்படும். வீடுகள் ஏதும் மனை வாங்க சிறிது காலம் பொறுத்திருப்பது நான் வேலைக்கு.



**ரிஷபம்:**
செய்யும் காரியங்களில் வெற்றியும் அதன் மூலம் பண வரவுகளும் ஏற்படும். தொழில் சம்பந்தமான முன்னேற்றமும் உயர்வான பதவிகளும் சிலர் பெறக்கூடும்.



**மிதுனம்:**
எதிர்கால நல்வாழ்வுக்கு இனிமையான வார்த்தைகளை பேசுவதும் சகல காரியங்களிலும் வெற்றி அளிக்கும் .



**கடகம்:**
தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு காரியங்களை செய்தாலும் சிறு சிறு தடை தாமதங்களால் தொல்லை ஏற்படும்.




**சிம்மம்:**
நம்பிக்கையானவர்களின் துணையோடு வெற்றிகளை குவிப்பீர்கள் சில காரியங்களில் வெற்றி தேடி வந்தாலும் வேறு சில செயல்களில் தேக்கம் ஏற்படுவதை தடுக்க இயலாது.



**கன்னி:**
எடுத்த காரியத்தை எளிதாக செய்து முடித்து வெற்றி பெறுவீர்கள் எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைத்து உற்சாகம் அடைவீர்கள்.



**துலாம்:**
செய்யும் செயல்களில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பணவரவு அதிகரிக்க உறவுகளின் மூலம் ஏற்பட்ட சிறு சலசலப்பினால் மன அமைதிக்கு பாதிப்பு வரலாம்.



**விருச்சிகம்:**
திட்டமிட்ட காரியங்களில் சில தள்ளி போகலாம். வர வேண்டிய பணவரவுகள் சிறிது முயற்சிக்கு பின் கைக்கு வந்து சேரும்.




**தனுசு:**
பணப்பரிவர்த்தனையில் நிதான போக்கு அவசியம். புதிய ஒப்பந்தங்களை முடிவு செய்வதில் அதிக கவனம் தேவை.



**மகரம்:**
பயணங்களில் அதிக கவனம் தேவை. சிறு சிறு பண பரிவர்த்தனை லாபகரமாக இருந்தாலும் அவசரம் காட்ட வேண்டாம்.



**கும்பம்:**
புதிய பொருள் வாங்குவதில் கவனம் தேவை எந்த விஷயத்திலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். அலுவலகத்தில் உயர் அதிகாரியின் ஆதரவுடன் பல சலுகைகள் பெற வாய்ப்புண்டு.



**மீனம்:**
உத்தியோகத்தில் சிறு சிறு சங்கடங்கள் குறுக்கிடும் என்றாலும் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து தடைகளை தகர்த்து முன்னேறுவீர்கள்.



## பௌத்தர்களின் உற்ற... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, காணி சுற்றுலாத்துறை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

விடுதலைப் புலிகளின் காலத்திலும் கூட வடக்கு கிழக்கில் புராதன பௌத்த நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எந்த சந்தர்ப்பத்திலும் பௌத்த விகாரைகள் சேதமாக்கப்படவில்லை.

எனினும், யுத்தம் நிறைவடைந்ததற்கு பின்னர் தொல்பொருள் இடங்களை திரிபுபடுத்தி பௌத்த அடையாளங்களாக சித்தரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவை பௌத்த அடையாளங்களாக இருந்திருந்தால் அது பௌத்த இடங்களாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர, அவற்றை திரிபு படுத்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த வகையில் குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரை அகற்றப்பட வேண்டும். தையிட்டியில் தனியார் காணி அபகரிக்கப்பட்டு, கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். மாங்குளத்தில் கட்டப்பட்டுள்ள விகாரை அகற்றப்பட வேண்டும். குருந்தூர் மலையில் ஆதி சிவனார் ஆலயத்தில் தமிழ் மக்கள் ஒரு பொங்கல் வைக்கக் கூட முடியாமல் உள்ளது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு தகரம் ஒன்றை வைத்து தான் பொங்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். அப்படியானால் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று 15 வருடங்களாகியும் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதற்கு காரணம் புத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொள்கின்ற இது போன்ற நடவடிக்கைகள்தான்.

## சட்டத்துக்கு மாறாக... (03 ஆம் பக்கத் தொடர்)

அவர்களை விடுவிப்பது,பிணை வழங்குவது தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும். அது தொடர்பில் தாம், தீர்மானிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபாகரனின் பிறந்த தினத்தை இறந்தவர்களுக்கான நினைவேந்தல் என்ற போர்வையில் அனுஷ்டிக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது. எதிர்காலத்தில் இவ்வாறு செயற்பட்டால் கைதுகள் தொடரும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இராசமாணிக்கம் சாணக்கியன் எம்பி முன்வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கு பதிலளிக்கும் வகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,பயங்கரவாத தடைச்சட்டம் நாட்டின் மிக முக்கியமான சட்டமாகும்.தேசிய பாதுகாப்புக்கு முரணான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. அந்த வகையில் முறையற்ற வகையில் செயற்பட வேண்டாம் என தமிழ் சமூகத்துக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற நினேவேந்தல் நிகழ்வன்று 11 பேர் கைது செய்யப்பட்டனர்.மூன்று நீதிமன்றங்கள் நினைவேந்தலுக்கு தடை விதித்திருந்தன. யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு அரசாங்கம் தடை விதிக்கவில்லை. பிரபாகரனின் பிறந்த தினத்தன்று கொடிகளை ஏந்தி சென்றவர்கள் முரண்பாடான விதத்தில் செயற்பட்டுள்ளனர். காட்சிப் படங்கள் மூலம் இது தொடர்பாக தெரிய வருகின்றது. இதன் பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

நினைவேந்தல் நிகழ்வில் பிரகாபரனின் உருவத்திலான கேக்,டீ.சேர்ட், புலிக் கொடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.அதற்கு எந்த வகையிலும்இடமளிக்க முடியாது.

இன நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் குரல் எழுப்பி வருகின்றபோதும், அவர்களே இவ்வாறான தடை செய்யப்பட்ட விடயங்களுக்கும் இடமளிக்க முற்படுகின்றார்கள். அது தவறு.அவர்கள் பொறுப்புடன் நடந்துக் கொள்ள வேண்டும்.

## வளிமண்டலவியல்... (03 ஆம் பக்கத் தொடர்)

காலநிலை தொடர்பான தகவல்களை சிறந்த வகையில் வெளிப்படுத்துவதே எமது நோக்கம். அந்த வகையில் உலக வங்கியில் நிதியுதவியுடன் வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உலகளவில் தொழில்நுட்ப நிபுணத்துவ அனுபவத்தை பெற்றுள்ள ஆலோசகர் ஒருவரை நியமிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சூழல் மாசு தொடர்பில் திருப்தியடையக்கூடிய நிலைமை காணப்படவில்லை என்பதையே அதன் அறிக்கைகள் எமக்கு தெரிவிக்கின்றன. அது தொடர்பில் பிராந்திய ரீதியான தீர்வு ஒன்றை நாம் பெற்றுக் கொள்ள வேண்டி யுள்ளது. அதற்காக ஜனாதிபதி உரிய கவனம் செலுத்தியுள்ளார்.

COP28 மாநாட்டுக்காக முன்மொழியப்பட்ட

# இளைஞர்களின் யோசனை ஜனாதிபதியிடம் கையளிப்பு



ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான *COP28* மாநாட்டுக்காக இலங்கை இளையோரின் யோசனைகள் அடங்கிய *Sri Lanka Youth Statement to COP28* என்ற அறிக்கை, இலங்கையின் இளம் பிரதிநிதிகள் குழுவின் பிரதானியும், இலங்கை இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் , பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்னவினால் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

காலநிலை அனர்த்தங்கள் மற்றும் அதன் பாதிப்புக்கள், அதற்கான தீர்வுகள் தொடர்பான 10 பரிந்துரைகளை இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

காலநிலை அனர்த்தங்கள் தொடர்பில் விரிவான தெரிவை இளைஞர் யுவதிகளுக்கு பெற்றுக் கொடுத்தல், கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் உயிரியல் பல்வகைத் தன்மையைப் பாதுகாப்புக்காக மேற்கொள்ள வேண்டிய உடனடி செயற்பாடுகள் மற்றும் பல்வேறு முக்கியமான செயற்பாடுகள் தொடர்பில் இந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மேற்பார்வையின் கீழ்,போதி மாதுறுவின் தலைமையில், பாத்திமா ஷமீலா, சந்தேவி பேர்டினேண்டோ மற்றும் தருஷி வீரசிங்க உள்ளிட்ட குழுவினரால் மேற்படி யோசனைகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

இதன்போது, இலங்கை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலநிலை மாற்றம் தொடர்பிலான அமர்வின் போது ஆற்றிய உரைகள், இலங்கை இளையோர் சமூக சம்மேளனத்தினால், அரச பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய இளைஞர் மாநாட்டில் (*Inaugural Local Conference of Youth*) பங்கேற்றவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் மேற்படி யோசனைகளைத் தயாரிப்பதற்கு உதவியாக அமைந்திருந்தாக பசிந்து குணரத்ன, ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான 28 ஆவது மாநாட்டுக்கு இணையாக டிசம்பர் 02 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை இளைஞர் நிகழ்ச்சியில் பசிந்து குணரத்னவால் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டது.

வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய நாடுகள் காலநிலை மாநாட்டிற்கு இணையாக நடைபெற்ற "இலங்கை இளைஞர் நிகழ்ச்சி" தேசிய இளைஞர் சேவை மன்றம், ஜனாதிபதி செயலகம், காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான அலுவலகம், சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்த இளைஞர்கள் எவ்வித நிதியத்தையும் பயன்படுத்தாமை சிறம்பசமாகும். இளைஞர்களின் யோசனைகளை **http://www.nysc.lk/youthstatements.pdf** என்ற ஆவணத்தில் காணலாம்.

மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்காகவே

# பயங்கரவாத தடை சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியது

சபையில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச

லோரன்ஸ் செல்வநாயகம்



தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் நாட்டு மக்களின் உயிரை பாதுகாப்பதற்காகவே பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் ஆட்சியாளர்களை குறை கூற முடியாது என சபையில் குறிப்பிட்ட அவர்,உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு எனினும் தடை செய்யப்பட்ட அமைப்பின் கொடிகள் மற்றும் இலட்சினைகளை அதன் போது பயன்படுத்த எவருக்கும் அனுமதி கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சம்பவத்தில் நீதி மன்றத்தின் உத்தரவை மீறியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்விடயத்தில் நாம் எதனையும் மேற்கொள்ள முடியாது. இந்த விடயத்தில் பொலிசார் தமது கடமையைச் செய்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ள அமைச்சர்,கைது செய்வதற்கான கட்டளையை எவரும் பொலிசாருக்கு பிறப்பிக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கு 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குற்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு குறுகிய காலம் கால அவகாசம் வழங்கப்பட்டது. சகல தரப்பினரதும் ஆலோசனைகளுக்க மைய தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை உருவாக்க முன்வைக்கப்பட்ட சட்ட நகலை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார்கள்.

அதேவேளை 2019,ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்ற போது, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் கடுமையாக பயன்படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். நாட்டு மக்களின் உயிரை பாதுகாப்பதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அது தொடர்பில் ஆட்சியாளர்களை குறை கூற முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுப்பெற்றுள்ள நிலையில் கடந்த ஆண்டு உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்.

அந்த சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என இரு தரப்பிலுமிருந்து மாறுப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

அந்த நிலையிலேயே அது மீள பெற்றுக் கொள்ளப்பட்டது.

உத்தேச பயங்கரவாத தடைச்சட்ட மூலம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவாரத்தையில் ஈடுபட்டு அவர்களின் நிலைப்பாட்டையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.. எதிர்வரும் மாதமளவில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடுகின்றார்.ஆனால் அவரை கொலை செய்ய முயற்சித்தவர்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

# இ-மொபிலிட்டி தேசிய கொள்கை வரைவுக்கான செயலமர்வு










இமொபிலிட்டி தொடர்பான தேசிய கொள்கை வரைவுக்கான பங்குதாரர்களின் கருத்துக்களைப் பெறுவதற்கான செயலமர்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

*UNESCAP* இன் போக்குவரத்துத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மதான் பந்து ரெக்மி இந்தியாவின் நிலைபேறான நகரங்கள் மற்றும் போக்குவரத்துக்கான ஆலோசகர் கௌஸ்துப் கோஷாவி, பிலிப்பைன்ஸ் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஜாய்ஸ் ரிவேரா, பேராசிரியர் அமல் குமாரகே மற்றும் பல உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து சிறப்பு விருந்தினர் நிகழ்ச்சியின் பங்களிப்பாளர்களாக இணைந்தனர்.

மாநாட்டில் விசேட உரையை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆற்றினார்,

"இலங்கை தற்போது புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான போக்குவரத்திலிருந்து வலுசக்தி அடிப்படையிலான போக்குவரத்து முறைக்கு மாறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது, மேலும் சாத்தியக்கூறுகளைத் தீர்மானிப்பதற்கான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளுடன் கொள்கைகள் மற்றும் உத்திகளில் கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் மின்சார வாகனங்களை பதிவு செய்வதற்கும் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்வதற்கும் இணைப்பதற்கும், தரங்களை நிர்ணயிப்பதற்கும் மற்றும் சார்ஜ் செய்வதற்குமான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மணிலாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டின் போது, இலங்கைக்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கு உதவுமாறு யுனெஸ்காப்பின் மதன் ரெக்மிக்கு விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டதால் இதற்கான பின்னணி உருவானது.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டை இமொபிலிட்டி ஆண்டாக பிரகடனப் படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுக்கள் மற்றும் தனியார் துறையின் அனைத்து பங்குதாரர்களின் ஆதரவும் முக்கியமாகக் கோரப்படுகிறது. தற்போதைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அனைவரின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம்.

மின்சாரம் மற்றும் மின் போக்குவரத்து தொடர்பான சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டை 2024 மார்ச் மாதம் இலங்கையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மின் போக்குவரத்துத் துறையில் ஒத்துழைப்பு, சர்வதேச அளவில் கருத்துப் பரிமாற்றம், முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட பல நோக்கங்களை அடைவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

போக்குவரத்தில் தனியார் வாகனங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் மற்றும் போக்குவரத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் கட்டுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் இணைந்து செயல்படுவதற்கு யுனெஸ்காப் மற்றும் இங்குள்ள அனைவரும் எதிர்காலத்தில் ஆதரவளிப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க தேவையான வழிவகைகளை உருவாக்குவதற்கான கொள்கை கட்டமைப்பு, வழிகாட்டுதல் மற்றும் மூலோபாய திட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, மேலும் இந்த மாநாட்டில் இணையும் அனைவரின் கருத்துகளையும் உள்ளடக்கி இந்த கொள்கை கட்டமைப்பு தயாரிக்கப்படும்.

அந்த முன்மொழிவுகள் அனைத்தையும் உள்ளடக்கி அமைச்சரவையில் அமைச்சரவை பத்திரமாக சமர்ப்பித்து, பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெற முடிந்தால், நமது நாட்டின் போக்குவரத்து வரலாற்றை மாற்றியமைக்கும் நிலைபேறான போக்குவரத்து அமைப்பிற்கான தேசிய முயற்சியில் பங்கேற்பவர்கள் அனைவரும் அதில் பங்கெடுத்த பெருமையைப் பெறுவார்கள். ."

# தொல்பொருள் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கீடு 39 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

லோரன்ஸ் செல்வநாயகம்

வரவு செலவுத்திட்டத்தில் புத்தசாசன சமய,கலாசார அலுவல்கள் அமைச்சின் தொல்பொருள் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கீடு 39 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 44 வாக்குகளும்,எதிராக 05 வாக்குகளும் அளிக்கப்பட்டன.175 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துக்கொள்ளவில்லை. பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் புத்தசாசனம் மற்றும் சமய,கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. விவாதத்தின் முடிவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொல்பொருள் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கீடு மீது வாக்கெடுப்பைக் கோரினார். அதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் பாதுகாப்பு அமைசுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 44 வாக்குகளும் எதிராக 05 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 39 மேலதிக வாக்குகளினால் ஒதுக்கீடு நிறை வேற்றப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்திருந்த நிலையில்,

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,செல்வராசா கஜேந்திரன்,தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம்,எம்.ஏ.சுமந்திரன்,சிறிதரன், ஆகியோர் வாக்கெடுப்புக்கு எதிராகவும் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும்,மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்
2023.12.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5319
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,106,240.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 2 2 5 3 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3561
சீட்டிழுப்பு திகதி 2023.12.05
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,807,904.80
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 28 34 38 58
விசேட எழுத்து B
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14905

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1667
2023.12.05
58241
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 416,837,124.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 10 33 56 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP
திகதி 2023.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 0145
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 4 8 2 9 4 8
L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.20,976,922.28

ராசி சுப பலன்
திகதி 2023.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 628
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,287,415.68
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 13 28 42 62
தனயோக இலக்கம் 42557
நாளுக்கான விதி எண் 15

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1349
2023.12.05
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,155,132.00
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 05 44 69 71
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 30240

# கிழக்கின் குரல்



## அம்பாறையில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மீறல்; வர்த்தகர்களிடம் பெருந்தொகை அபராதம் அறவீடு

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 08 இலட்சத்தி 64 ஆயிரத்தி 499 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்ற பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 105 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 85 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு 08 இலட்சத்தி 64 ஆயிரத்தி 499 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்செய்தமுறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார். அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலை; டெங்கு நோய் பரவும் அபாயம்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

சீரற்ற காலநிலை காரணமாக டெங்குநோய் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுவதாக சுகாதார பிரிவினர் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

அதற்கமைய அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ்சின் பணிப்புரைக்கமைவாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ. காதரின் தலைமையில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

டெங்கு நோயாளர்கள் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமசேவகர்பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவ



டிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. புதுப்பள்ளி சதுக்கத்தில் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் இணைந்து சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் காதரின் அறிவுரைகளுக்கமைய ஒவ்வொரு குழுக்களாக பிரிந்து கள விஜயங்களை மேற்கொண்டனர். சுற்றுப்புற சூழலில் தேங்கியுள்ள குப்பைகளையும் நீர் தேங்கியுள்ள இடங்களையும் அகற்றி துப்புரவாக வைத்திருக்குமாறும் பொதுமக்களை கேட்டுக்கொண்டனர். கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பிரிவில் கடந்த வருடம் டிசம்பர் மாதமளவில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டதாகவும் சுகாதார பிரிவினரின் நடவடிக்கைகளையடுத்து தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் காதர் மேலும் தெரிவித்தார்.



க.பொ.த.சாதாரணதர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் முதற்தடவையாக கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியில் 23 மாணவர்கள் சகல பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர். இதனையடுத்து கல்லூரி அதிபரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களான ஸஹிரியன் '90 அமைப்பினர் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது சாதனை நாயகன் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் பழைய மாணவர் அமைப்பினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (படம்; மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## கல்முனை சாஹிராவில் பாராட்டு விழா

(கல்முனை விசேட நிருபர்)



க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 9 ஏ சித்திகளைப் பெற்றுக் கொண்ட 23 மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் தொழிலதிபருமான எம்.எஸ்.எம். முபாரக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனை படைத்த மாணவர்களுக்கு பணப்பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் டாக்டர் சனுஸ் காரியப்பர் உட்பட நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவ சங்கத்தின் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். இச்சாதனையானது ஒரு பாடசாலை பெற்ற அதி சிறந்த பெறுபேறு என்பதோடு இலங்கையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கல்முனை சாஹிராவானது தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூர் நகரசபைக்கு சிறந்த கணக்கீட்டு முகாமைத்துவத்துக்கான விருது



(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

இலங்கை பொது நிதி கணக்காளர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ரீதியிலான விருது வழங்கும் நிகழ்வின் போது சிறப்பான கணக்கீட்டு முகாமைத்துவத்திற்கான சிறப்பு விருது ஏறாவூர் நகர சபைக்கு கிடைத்துள்ளது. கடந்த வருடத்தில் நகர சபையின் கணக்கு முகாமைத்துவத்தை சிறப்பாக அறிக்கையிட்டதற்கான சிறப்பு விருதினை நகர சபையின் சார்பில் அதன் செயலாளரும் விசேட ஆணையாளருமான எம்.எச்.எம். ஹமீம் மற்றும் நகர சபையின் கணக்காளர் திருமதி புஸ்ரா நுசைர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் அசோக்க ரஞ்சித் இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விருதை வழங்கி வைத்தார்.

### திடீர் டெங்கு பரிசோதனை

## மட்டு. இ.போ.ச. டிப்போவில் 4 இடங்களில் டெங்கு குடம்பிகள்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினருடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ வளாகத்தில் நான்கு இடங்களில் டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு பணிப்பாளர் டாக்டர் நளின் ஆரியரத்தின தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வருகை தந்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் இலங்கை போக்குவரத்து சபை மட்டக்களப்பு டிப்போ வளாகத்தில் நடத்திய திடீர் டெங்கு பரிசோதனையின் போது டெங்கு பரவும் இடங்களாக வைத்திருந்த நான்கு இடங்களில் டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் மாநகர சபை உட்பட பல நிறுவனங்களின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வைத்திய அதிகாரிகள் இணைந்து இப்பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பருவமழை ஆரம்பித்திருப்பதால் டெங்கு நோய் தீவிரமாக பரவி வருகிறது.

பல்வேறு இடங்களில் டெங்கு நோய் தாக்கத்திற்கு பலர் ஆளாகியுள்ளதாகவும் வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சிங்கள மொழிதினப் போட்டி வெற்றியாளர்களுக்கு

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!

( காரைதீவு குறூப் நிருபர் )



சம்மாந்துறை வலய மட்டத்தில் இடம்பெற்ற இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வலய சிங்களப் பாடத்திற்கான வளவாளர் ஏ.எச்.நாஸிக் அஹ்மத் தலைமையில் நேற்று(6) புதன்கிழமை நடைபெற்றது.

சிங்கள மொழிதினப் போட்டியில் பேச்சு, வாசிப்பு, மொழிப்பிரயோகமும் கிரகித்தலும் மற்றும் நாட்டார் குழுப்பாடல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (6) புதன்கிழமை சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது. சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பீ.எம்.வை.அரபாத், பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ.எல்.அப்துல் மஜீது, பிரதிக் கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) ஏ.சி.நுஸ்ரத் நிலோபரா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர், நாவிதன் வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பீ.பரமதயாளன் மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றினார்கள்.



றாணமடு இந்துக் கல்லூரியில் இயங்கி வரும் விசேட தேவையுடைய மாணவர்களின் அலகில் கல்விகற்கும் மாணவன் யோகராஜா தரணிதரன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறப்பான பெறுபேற்றை பெற்றுள்ளார்.

(படம் மணல்சேனை நிருபர்)

## மூதூரில் பிரதேச செயலகத்தில் விளையாட்டு கழகங்களுடனான கலந்துரையாடல்

(கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்)

மூதூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட 44 விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டதுடன், விளையாட்டுக் கழகங்களின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தன்னார்வ செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் 15 பேர் கொண்ட பிரதேச விளையாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டது. அத்துடன் கலந்துகொண்ட கழகங்களினால் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.



விளையாட்டுத் துறையை முன்னேற்றும் பொருட்டு சிறந்த வீரர்களை இனம் கண்டு அவர்களுக்கான பயிற்சி முகாம்களை நடாத்தல்,

சிறந்த விளையாட்டு வீரர்களை கௌரவித்தல்.அனர்த்த காலங்களில் பிரதேச செயலகத்தோடு இணைந்து தொண்டுபணிகளில் ஈடுபடல், டெங்கு ஒழிப்பு மற்றும் சிரமதானங்களில் பங்குபற்றல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் , இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

### வருடாந்த இடமாற்ற மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறு

## அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். நஸீர் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்குவது தொடர்பாக கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு இடமாற்ற சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட இடமாற்றப் பட்டியல் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இணைந்த சேவை உத்தியோகத்தர்களால் இடமாற்ற விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அலுவலகங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இடமாற்றங்கள் யாவும் 2024.03.01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும், இவ்விடமாற்றம் தொடர்பில் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், மேன்முறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் அனைத்தும் அறியத்தரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.



காலதாமதமாக கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விபரமடங்கிய சுற்றுநிரூபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறும், இடமாற்றம் வழங்கப்பட்ட அலுவலகர்கள் புதிய சேவை நிலையத்தில் உரிய திகதியில் கடமையை பொறுப்பேற்கும் வண்ணம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி திணைக்கள தலைவர்களை கேட்டுள்ளார்.

மேன்முறையீட்டுக்கு விண்ணப்பிக்க தீர்மானித்துள்ள உத்தியோகத்தர்கள் www.ppaep.lk/appeal.php எனும் இணையவழி மூலம் விண்ணப்பித்ததன் இறுதியில் விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், கன்னியா வீதி வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.



பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரியில் க.பொ.சாதாரண தரப் பரீட்சையில் தகைமை பெற்ற மாணவிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (04) பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் பீ.முஹாஜிரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சகல பாடங்களிலும் ஏ தர சித்திகளைப் பெற்ற மூன்று மாணவிகள் உட்பட உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற சுமார் 40 மாணவர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். (படம்; பாலமுனை திகரன் நிருபர்)

# கிளிநொச்சியில் வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா!



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடாத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா (06) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனும், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க தலைவர் கலாபூஷணம் வே. இறைபிள்ளையும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, பண்பாட்டுப்பவனி கிளிநொச்சி காக்காகடைச் சந்தியிலிருந்தும் அதேவேளை ஊர்திப் பவனி கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்தும் ஆரம்பமாகி விழா மண்டபத்தை வந்தடைந்தது.

தொடர்ந்து கிளிநொச்சி திறன்விருத்தி மண்டபத்தில் பாரம்பரியப் பொருள்களின் கண்காட்சி அதிதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டு பார்வையிடப்பட்டது.

மேலும் குறித்த காண்பியக்கூடக் கண்காட்சியானது இன்றும் (07) தொடர்ந்து நடைபெறவுள்ளது.

# வடக்கின் உதயம்

## வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை சாட்சியங்கள் பதிவு

யாழ்.விசேட நிருபர்

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை வழக்கில் மூன்று பொலிஸ் சாட்சிகள் மற்றும் இரண்டு சிவில் சாட்சிகள் யாழ். நீதவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை தமது சாட்சியங்களை பதிவு செய்துள்ளன.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது. அந்நிலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது , நவம்பர் 08ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் உள்ளிட்ட மூன்று பொலிஸ் சாட்சியங்கள் தமது சாட்சியை பதிவு செய்தன. அத்துடன் உயிரிழந்த இளைஞனின் சகோதரி மற்றும் உயிரிழந்த இளைஞருடன் கைதான இளைஞன் ஆகிய இருவருடன், பிறிதொரு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு, ஒரே சிறைக்கூடத்தில், தடுத்து வைக்கப்பட்டு இருந்த இளைஞனும் மன்றில் தோன்றி சாட்சியம் அளித்தனர். வழக்கினை நாளை வெள்ளிக்கிழமைக்கு நீதவான் ஒத்திவைத்தார். அதேவேளை வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்பு நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# யாழில். டெங்கு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு, தெருவெளி நாடகம்

யாழ். விசேட நிருபர்

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு தெருவெளி நாடகம் அச்சுவேலியில் புதன்கிழமை நடைபெற்றது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களால், மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த தெருவெளி நாடகம் அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது டெங்கு நோயை ஏற்படுத்தும் காரணிகள், மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம் அத்துடன் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பான விபரங்களும் அச்சுவேலி பகுதியில் அதிகரித்துள்ள டெங்கு நோய் தொடர்பான விவரங்களும் உள்ளடங்கலாக குறித்த தெருவெளி ஆற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

# சமாதானத்தின் செய்தி தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி

யாழ்.விசேட நிருபர்



"சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்துச் செல்லும் பயணம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற பவனி நல்லூரை வந்தடைந்தது. கண்டியில் இருந்து இளைஞர் அமைப்பைச் சேர்ந்தோர் நல்லூரை வந்தடைந்தனர்.

கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வரை உள்ள சர்வமதத் தலைவர்களுக்கு சமாதானத்தின் செய்தி மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தல் வேலைத்திட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி ஸ்ரீ நாட்ட தேவாலத்திற்கு அருகாமையில் இந்த செயற்திட்டத்தை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இளைஞர்கள் நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தனர். எமது சகோதர மக்களின் பறிக்கப்பட்ட நீதி மற்றும் நியாயத்திற்காக ஒன்றாக குரல் கொடுத்து சகோதர பிணைப்பின் மூலம், உண்மை மற்றும் நீதியை கண்டறியும் எமது பயணத்தின் முதல் படியாக, நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான பொறிமுறைகள், அரசியல் கலாச்சாரம், தேர்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், காணி சொத்து பாதிப்புக்கள், பலவந்தமாக வெளியேறல், சுதந்திரம், பாதுகாப்பு, இலங்கையில் வர்த்தகம் மற்றும் நல்லிணக்கம், மொழி ஆகிய முன்மொழிவுகளை இவர்கள் முன் வைத்துள்ளனர்.

## உழவியந்திரத்தின் கலப்பைக்குள் சிக்கிய சிறுவன் உயிரிழப்பு!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் வீட்டில் உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்ட சிறுவன் 04.12.2023 அன்று யாழ்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். சிறுவன் உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், பனையாண்டான் நெடுங்கேணியினை சேர்ந்த மூன்றரை அகவையுடைய சிறுவன் கடந்த 21.11.2023 அன்று வீட்டில் உழவு இயந்திரம் வீட்டுக்காணியினை உழவு செய்துகொண்டிருந்த போது உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சென்று சிக்குப்பட்ட நிலையில் விபத்தினை சந்தித்துள்ளார்கள்.

சம்பவத்தில் காயமடைந்த சிவலோகநாதன் விந்துஜன் என்ற சிறுவன் அருகில் உள்ள மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதான மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 04.12.2023 அன்று உயிரிழந்துள்ளான்.

# மன்னார் மேலதிக அரசாங்க அதிபராக மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார்

(தலைமன்னார் விஷேட நிருபர் )



மன்னார் மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக (காணி) மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் நியமனம் பெற்றுள்ளார். புதன்கிழமை (6.12.2023) முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் பதில் மாவட்டச் செயலாளர் பரந்தாமனின் முன்னிலையில் இவர் தனது பதவியினை பொறுப்பேற்றுக் கொண்டார். தற்போது மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) பதவியேற்றுள்ள மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் மன்னார் மாவட்டத்தில் கடந்த 12 வருடங்கள் மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளராக பதவி வகித்து வந்துள்ளார். நானாட்டான் பிரதேச செயலாளராக கடமையாற்றிய நிலையிலேயே இவர் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) பதவியேற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்

(மன்னார் குறுப் நிருபர்)

சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி 'சமூகத்தை வலுப்படுத்துவோம் 'எய்ட்ஸ்' ஐ தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது. மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பாலியல் நோய்கள், எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.



கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் பாதணிகள் வாங்குவதற்கான பண வவுச்சர் வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் மாத்தளை கிரிமெட்டியாவ மஹா நாம வித்தியாலயத்தில் நேற்று காலை வைபவரீதியாக நடைபெற்றது. அதற்கமைய மத்திய மாகாணத்திலுள்ள 574 பாடசாலைகளைச் சேர்ந்த 7251 மாணவ, மாணவிகள் மற்றும் 114 பௌத்த பிரிவெனாக்களில் கற்கும் பிக்கு மாணவர்களுக்கும் இலவசமாக பாதணிகள் வாங்குவதற்கான வவுச்சர்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சரின் செயலாளர் தயான் திசாநாயக்க, மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக ஹேரத், மாகாண கல்வி பணிப்பாளர் அமரசிறி பிரியதாச, மாத்தளை வலய பதில் கல்விப் பணிப்பாளர் நயோமி ஹெட்டியாராச்சி உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# மலைச்சாரல்

## அமரர் எம்.ஏ. தங்கவேலின் 44வது வருட நினைவுதினம்

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

விவசாயத் தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபகர் அமரர் எம்.ஏ. தங்கவேலின் 44வது வருட நினைவுதினம் எதிர்வரும் 9ஆம் திகதி பதுளை தெமோதரையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. பதுளை – தெமோதரையைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட அமரர். எம்.ஏ. தங்கவேல், மலையகப்பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்த பாரிய சேவைகளை மேற்கொண்டிருந்தார். அதற்கமைய 1968ஆம் ஆண்டு விவசாயத்தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் என்ற அரசியல் கலப்பற்ற தொழிற்சங்கமொன்றை ஸ்தாபித்து, அரிய பல சேவைகளை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தெமோதரையில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி மற்றும் மலர் வளையம் வைப்பு சிறப்புரைகள் நிகழ்த்தல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் மலையகத் தொழிற்சங்கத்தலைமைகள், சமூக நலன் விரும்பிகள், மலையக ஆய்வாளர்கள் என்ற வகையில் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக, விவசாயத்தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஸ்ணசாமி தெரிவித்தார்.

# இராகலை பொலிஸ் நிலையத்தில் மகளிர்,சிறுவர் துஷ்பிரயோக பணியகம் திறப்பு



இராகலை பொலிஸ் நிலையத்தில் "வேல்ட் விஷன்" சமூக தொண்டு நிறுவன நிதி அனுசரணையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் முருகையா செல்வகுமார் தலைமையில் நேற்று காலை இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மத குருமார்கள், வேல்ட் விஷன் நிறுவனத்தின் இலங்கை அபிவிருத்திக்கான முகாமையாளர் மெலிஸா ஸ்ரேக் (அவுஸ்திரேலியா), நிறுவனத்தின் பிராந்திய அபிவிருத்தி அதிகாரிகளான ரஸ்மிகா மற்றும் கிஸான், நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம். பி.பஸ்நாயக்க ஆகியோருடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், அரசாங்க சேவையாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(ஆ.ரமேஷ்)

# பூண்டுலோயாவில் மண்சரிவு அபாயம்

(தலவாக்கலை குறுப் நிருபர்)



கொத்மலை பிரதேசத்துக்குட்பட்ட வடக்கு பூண்டுலோயா மேற்பிரிவுக்கு செல்லும் பிரதான வீதியில் மண்மேடு சரிந்து விழுந்ததால் அவ்வழி போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் நேற்று பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இதர தொழிலுக்கு என செல்வோர் பாரிய அசௌகரியத்துக்குள்ளாகினர்.

# கட்டுப்பாட்டு விலையை மீறிய 77 வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)




கட்டுப்பாட்டு விலை மீறி சீனி மற்றும் அரிசி விற்பனை செய்த இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 77 வியாபாரிகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டுள்ளன. இரத்தினபுரி, பலாங்கொடை,பெல்மதுளை, எம்பிலிப்பிட்டிய, கலவான, இறக்குவான ஆகிய பிரதேசங்களில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே 77 வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் இத்தேடுதல்கள் நடத்தப்பட்டதாகவும் அவ்வப்பிரதேச நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதானி உதய நாமல்கம நேற்று தெரிவித்தார்.

# விசேட தேவையுடையோருக்கு கண்டியில் பிரத்தியேக வசதிகள்



கண்டியில் பொது இடங்களுக்கு வருகை தரும் விசேட தேவையுடையோருக்கான பிரத்தியேக வசதிகளை செய்துக் கொடுக்கவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார். சர்வதேச விசேட தேவையுடையோருக்கான தினத்தை முன்னிட்டு கண்டியில் இடம்பெற்ற இவ்வைபவமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த காலங்களில் விசேட தேவையுடையோருக்கான ஒதுக்கீடுகள் குறைவாகவிருந்த போதும் அடுத்துவரும் காலங்களில் ஒதுக்கீடுகளை அதிகரிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கண்டியில் அமைக்கப்படவுள்ள பல்நோக்கு வாகன போக்குவரத்து முனையத்தில் வலம் குறைந்தவர்களுக்கான விற்பனைக் கடைத்தொகுதி ஒன்றையும் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் விசேட தேவையுடையோருக்கான பல்வேறு உபகரணங்களும் வழங்கப்பட்டன. விசேட தேவையுடையோருக்கான சக்கர நாற்காலி, ஊன்றுகோல், மூக்குக் கண்ணாடி, செவிப்புல உணர் கருவி உட்பட பல்வேறு உபகரணங்கள் இங்கு வழங்கப்பட்டன.

## இரத்தினபுரி மாவட்டம் 11 பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் கலவான,கொலன்ன,எலபாத, ஒப்பனாயக்க,இரத்தினபுரி,எஹலியகொடை,பலாங்கொடை, இம்புல்பே,கொடகவெல,குருவிட,வெலிகேபொல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

# மருதூர்க் கொத்தனின் 'அதிமதுரம்' குறுநாவல் வெளியீட்டு விழா கண்டி மாநகரில்

## இலக்கிய ஆளுமைகள் பலரும் பங்கேற்பு

கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் மற்றும் மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கம் ஆகிய இரு சங்கங்களின் ஏற்பாட்டில் கலாநிதி செ. சுதர்சன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி ஆகியோரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிக்கொணர்ந்த மருதூர்க் கொத்தனின் 'அதிமதுரம்' குறுநாவல் வெளியீட்டு விழா கண்டி டி. எஸ். சேனாநாயக வீதியில் அமைந்துள்ள செல்லத்துரை ஞாபகார்த்த மண்டபத்தில் (அசோக வித்தியாலயத்திற்கு முன்னால்) மலையக கலை கலாசார இரத்தின தீபம் சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் துரை மனோகரன் கலந்து சிறப்பித்தார்.

இதில் வரவேற்புரையினை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமனும் வாழ்த்துரையினை பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர். பி. எம். ஜமாஹீரும் நூலாய்வுரையினை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை உதவி விரிவுரையாளர் வி. சாரங்கனும் நிகழ்த்தினர்.



இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான மலையக கலை கலாசார இரத்தின தீபத்தின் ஏற்பாட்டாளர் ராஜா ஜெயின் கின்ஸ், சட்டத்தரணி எழுத்தாளர் வைஸ், சந்தரவதன ரட்ண ராஜ குருக்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர் பேராசிரியர் துரை மனோகரன் இங்கு உரையாற்றும் போது;

இலங்கையைப் பொறுத்தவரையில் இன்று மிக முக்கியமான நாள் என்று சொல்லாம். ஏனென்றால் இலங்கையின் மிகச் சிறந்த இலக்கியவாதியினுடைய புதிய நூலொன்று இன்று வெளியிடப்படுகிறது. ஆகவே அந்த நூலை வெளியிட்டு வைக்கின்ற பெருமை கண்டியைச் சேர்கிறது. அதனால் கண்டி பெருமை அடைகிறது.



இந்த நூலைக் கொண்டுவருவதில் முக்கிய பங்கெடுத்த எனது மாணவன் கலாநிதி செ. சுதர்சன் மற்றைய சிரேஷ்ட ஊடகவியலாளர் எழுத்தாளர் கவிஞர் இக்பால் அலி ஆகிய இருவரையும் பாராட்டுதல் வேண்டும். நான் மருதூர்க் கொத்தனை இருமுறை சந்தித்துள்ளேன். பல ஆண்டுகளுக்கு முன்னர் 80 களில் தொடக்கத்தில் அவர் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறைக்கு அவர் வந்திருந்தார். அவருடன் நீண்ட நேரம் உரையாடினேன். 2000, 2001 தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வு மாநாடு நடைபெற்றது. அதில் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து பல விரிவுரையாளர்கள் சென்று இருந்தோம். அப்பொழுது அவரை சந்தித்து பேசக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆகவே, நன்றாகத் தெரிந்த மூத்த எழுத்தாளர் ஒருவரின் நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்து கொள்வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.



இந்த நூலை வெளிக் கொணர்வதில் முக்கிய ஈடுபாடு காட்டிய அவருடைய மகன் ஆரிப் இஸ்மாயீல் பெரு மதிப்புக்குரியவர். உண்மையிலே ஆரிப் இஸ்மாயீல் மிக முக்கியமாக பாராட்டுக்கும் நன்றிக்குமுரியவர். அவர் மென்மேலும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். .

பன்முகப் படைப்பாளியான மருதூர்க் கொத்தனின் கதை உலகம் கலைத்துவம் நிரம்பியது. பெரும்பாலான முற்போக்கு கதாசிரியர்களைப் போல கொள்கைகளை விளக்கும் பால பாடங்களாகக் கதைகளைப் படைக்காது, கலைத்துவம் மிக்கவையாக இவர் படைத்துள்ளார். இது இவரின் கதைக்கலையின் தனித்தன்மை, சமூக யதார்த்த ரீதியில் மிகுந்த கரிசனையுடன் ஈடுபட்டிருந்தாலும் இவரது கதைகள் கலைவரட்சி கடுகளவும் இல்லாதவை போன்றதாகும்.

அதேபோன்று, உண்மையின் தரிசனங்கள் நிறைந்த அடி மக்களின் வாழ்வியலையும் சீதனப் பிரச்சினையால் வாழ்விழந்து தவிக்கும் பெண்களின் சிக்கல்களையும் இருளில் மூழ்கிக் கிடந்த சம்பவங்களையும் முழுமையான வீச்சுடன் வெளிக்கொண்டுவருவதைத் தெளிவாக உணர முடிகிறது. நாவலில் மக்களது மண்வாசனை மிக்க மொழி நடையும், கலாசார சூழலும் இயல்பாகவே முகம் காட்டுகின்றன. இத்தகைய நல்ல நிகழ்வுக்கு பரமேஸ்வரன் அவர்கள் மண்டபத்தையும் தந்துதவி அதற்குத் தேவையான சிற்றுண்டி உணவுகளை வழங்கி அனைத்துப் பங்களிப்புக்களையும் செய்த அவருக்கு நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக கலை கலாசார (இரத்தினதீபம்) சங்கத்தின் தலைவர் பரமேஸ்வரன் இங்கு உரையாற்றுகையில்;

நண்பர் இக்பால் அலி என்னிடம் தானும் பேராதனை பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் ஆகிய இருவரும் சேர்ந்து மருதூர்க் கொத்தன் எழுதிய 'அதிமதுரம்' எனும் பெயரில் குறுநாவல் ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றோம் என்று தெரிவித்தார். நான் உடனே அதற்கு அந்நூலை எமது இடத்தில் வெளியிடுவோம் என்று மறுதலிக்காமல் தெரிவித்தேன். காரணம் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் கலாநிதி சாதியா பௌஸர் எழுதிய மலையக இலக்கியம் குறித்த இரு பெரிய நூல்களின் வெளியீட்டு விழாவை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கமும் தமிழ் வர்த்தக சங்கமும் ஒன்றிணைந்து மிகப் பிரமாண்டமாக நடத்தியது .

அப்பொழுது நான் தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளராகவும் அதற்குத் தலைவர் அமரர் ஆர். அன்பழகன் இருந்தார். இவ்விழாவின் முன் ஏற்பாடுகள் தொடர்பில் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க முக்கியஸ்தர்களுக்கும் தமிழ் வர்த்தக சங்க முக்கியஸ்தர்களுக்குமிடையிலான பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. அந்நூல் வெளியீட்டு விழா கண்டியில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த சனம். அதில் கலந்து கொண்டவர்கள் இங்கு பலர் இருக்கின்றார்கள். யாவரும் நன்கு அறிவார்கள்.

அந்நூல் வெளியீட்டு விழா குறித்து இன்றைய சிறப்பு விருந்தினர் பேராசிரியர் துரை மனோகரன், ஞானம் சஞ்சிகையில் மிகவும் திறன்பட எழுதியிருந்தார். அந்த வகையில் இந்த இரு அமைப்புக்களையும் ஒன்று சேர்த்து அந்நூல் வெளியீட்டுக்கு இணைப்பாளராக விளங்கியவர் இக்பால் அலி. ஆதலால் இந்நிகழ்வு குறித்து அவர் கூறியதுடன் எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்காமல் எங்களுடைய மண்டபத்தில் தாராளமாகச் செய்யலாம். நான் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றேன் என்று நான் அவரிடம் தெரிவித்தேன். அந்த வகையில் இந்த மண்படம் திறக்கப்பட்டு முதல் நூல் வெளியீட்டு விழா எனது அனுசரணையுடன் இன்று நடைபெறுவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

மருதூர்க் கொத்தன் இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். ஓர் அதிபர். அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளராக அறியப்படினும் அவர் ஒரு பன்முக ஆளுமை மிக்கவர். கவிதை, நெடுங்கவிதை, காவியம், உருவகம், கதை, நாவல், இலக்கியம், விமர்சனம், நாடகம், திறனாய்வு, ஓவியம் மற்றும் இசைப் பாடல்கள் எனும் துறையில் மிளிர்ந்தவர். இவர் பற்றிய ஆய்வுகள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளப்பட்டன. இவருடைய சிறுகதை



க. பொ. த உயர் தர பாட நூலில் இணைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்குப் பல்கலைக்கழத்தில் பன்முக ஊடகவியலாளர், கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெஸ்மி மூஸா மருதூர்க் கொத்தனின் இலக்கியம் பற்றி ஆய்வு செய்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி தத்தவ பட்டத்தைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் எம்மோடு இல்லா விட்டாலும் அவருடைய இலக்கியப் படைப்புக்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என தெரிவித்தார்.

★ **பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் நூல் வெளியீட்டுரையாற்றும் போது;** இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு மருதூர்க் கொத்தனின் மாணவனான பேராசிரியர் பீ. எம். ஜமாஹீர் இங்கு வருகை தந்துள்ளமை உண்மையிலேயே நமக்கு எல்லோருக்கும் மகிழ்வைத் தருகிறது. ஓர் ஆசிரியர். அந்த ஆசிரியருடைய மாணவர் ஜமாஹீர்.

தமிழை எடுத்துக் கொண்டால் பழந் தமிழில் இருந்து இடைக்கால தமிழ் வரை நாம் நோக்கினால் காவிய மரபு என்று ஒரு மரபு இருக்கிறது.

காப்பியங்களிலே கதைகளைச் சொல்லுகின்ற மரபு. அது இயற்கையோடு நடந்த நிகழ்வுகளாக இருக்கலாம் அல்லது தெய்வங்கள், கடவுள், அவதாரங்கள் பற்றிய கதைகளாக இருக்கலாம். அல்லது அடியார்கள் புனிதர்கள், பூதர்கள் பற்றிய வாழ்க்கை வரலாறாக இருக்கலாம். தமிழில் இருந்தது. அதை நாங்கள் காவிய மரபு என்று சொல்கின்றோம். அத்தகைய வளமான காவிய மரபு சிலப்பதிகாரத்தில் இருந்து தேம்பாவணி, சீறாப்புராணம், பின்னர் பாரதி எழுதுகின்ற பாஞ்சாலி சபதம். குயில் பாட்டு, மஹாகவி ஒரு சாதாரண மனிதர் எழுதுகின்ற சரித்திரம் கண்மணியாம் காவியம் என்று ஒரு நீண்ட நெடிய இலக்கியப் பாதை தமிழில் இருக்கிறது. ஆனால் மேலேத்தேசத்தவர்களுடைய வருகைக்குப் பின்பு குறிப்பாக ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தின் காரணமாக நவீன உரை நடை தோற்றம் பெறுகின்றது. செய்யுள் வடிவிலே



பாடப்பட்ட காவியங்கள் போன்று உரை நடையிலே கதைகளை எழுத வேண்டும் என்ற எண்ணம் கற்றவர்கள் மத்தியிலே குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினர்களிடையே தோற்றம் பெறுகிறது. மேலே தேசத்தில் எழுந்த நாவல்களைப் போன்று தமிழிலும் நாவல் எழுத வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இவ்வாறு எழுந்த நாவல்களை ஆரம்ப கால நாவல் என்று சொல்லுகின்றோம். ஆரம்ப கால நாவல் என்று ஒரு பாடப் புத்தகம் இருக்கிறது. இலங்கையின் முதல் தமிழ் நாவல் என்று சொல்லுகின்ற அசன்பே சரித்திரம் அது முதற் புள்ளியோடு ஆரம்பமாகிறது. அந்த அசன்பே சரித்திரத்தை தொடங்கி வைத்தவர் அறிஞர் சித்திலெப்பை என்பவரே.

இலங்கையின் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் என்று சொல்லுகின்ற அநாகரிக தர்மபால, ஆறுமுக நாவலர், ஆகியோருடன் சேர்த்துப் பேசப்படக் கூடிய ஒருவர். அவர் எழுதிய தொடக்கத்தோடு இன்று வரை பலர் நாவல்களை எழுதி வருகிறார்கள். அந்த வகையில் மருதூர்க் கொத்தனின் நாவலின் முதலாவது பதிப்பை வெளியிடுகின்றோம். இலங்கையில் எழுத்தாளர்களிடையே இருக்கின்ற சிக்கல் அல்லது துயரம் என்னவென்று சொன்னால் அவர்கள் இருக்கின்ற பொழுது அதனை அச்சுவாகனம் ஏற்றி வெளியிட்டு அதைக் கண்டு மகிழ்ந்து அதன் விமர்சனங்களைப் பெற்றுக் கொண்டு எதிர் வினையாற்றுகின்ற பொதுவான சூழல் பெரும்பாலான இலக்கியவாதிகளுக்கு வாய்ப்பதில்லை. அப்பொழுது அவர்கள் வாழ்ந்த சூழல் அவர்களுக்கு வாய்க்காமல் போகின்றது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற சூழலில் ஒரு கவிதை எழுதினால் முகப் புத்தகத்திலேயே உடனே பதிவேற்றம் செய்து விடலாம். முன்னர் அவ்வாறு இல்லை. கவிதையைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பினால் திருத்திப் போடுவார்கள். அல்லது அப்படியே போடுவார்கள். தகுதியில்லா விட்டால் நிராகரித்து விடுவார்கள்.

இந்த நாவலை எழுதிய மருதூர்க் கொத்தன் அவர் ஒரு பன்முக ஆளுமை கொண்ட இலக்கியப் படைப்பாளி. நிறைய சிறுகதை கவிதைகள், நாடகங்கள் குட்டிக் கதைகள், பாடல்கள், இலக்கிய விமர்சனம், கட்டுரைகள் அரசியல் கட்டுரைகள் அவை போல குறுநாவலும் எழுதி இருக்கின்றார். மருதூர்க் கொத்தனின் கதைகளில் மிகவும் சிறப்பாக மிளிர்கின்ற பண்பு என்னவென்றால் மிகச் சிறந்த நடை. இலக்கியம் என்பது மொழிக் கலையாகும். ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு கம்பி, சீமெந்து, கல், இரும்புகள் தேவைப்படுகின்றன. அதேபோல இலக்கியத்தை கட்டுவதற்குத் தேவையானது மொழி என்றார்.

★ **பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறைத்தலைவர் பேராசிரியர் பீ.எம். ஜமாஹீர் வாழ்த்துரை வழங்குகையில்;**

மருதூர்க் கொத்தனின் மகன் அவுஸ்திரேலியாவில் பிரபல்யமான பொறியியலாளராக இருக்கின்றார். அவர் அந்நாட்டில் குடியுரிமை பெற்ற ஒருவர். தகப்பனாருடைய புத்தகத்தை அண்மைக்காலமாக வெளியிட்டு



வருகின்றார். அண்மையில் நான் சந்தைக்குச் சென்றிருந்தேன். அவர் பின்னால் தொட்டார். திரும்பிப் பார்த்தேன். நான் அவரை மதிக்கவில்லை. அவர் நான் ஆரிப் என்று சொன்னார். அவரைச் சின்னக் காலத்தில் கண்டது. அவரே ஒரு மருதூர்க் கொத்தனாக மாறியிருந்தார். பாடசாலையில் மருதூர்க் கொத்தன் சேர் எவ்வாறு இருந்தாரோ அவர் அவ்வாறு இருந்தார். இந்த புத்தகத்தின் உள் அட்டையைப் பார்க்கின்ற போது மருதூர்க் கொத்தன் அறக் கட்டளை ஸம் ஸம் வீதி மருதமுனை என்று இருந்தது. மருதூர்க் கொத்தன் எப்பொழுதும் மக்களுடன் இரண்டறக் கலந்துதான் இருந்தார். அந்த மருதமுனையின் சிறந்த அடையாளம் யார் என்றால் முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா. இன்னுமொரு அடையாளம் புலவர் மணி ஆ. மு. ஷரிபுத்தீன். அவருடைய மகன் ஜின்னா ஷரிப்புதீன் என்று பலரைக் குறிப்பிடலாம்.

1978 இல் ஊரில் சூறாவளி அடித்தது. அப்பொழுது நான் ஐந்தாம் ஆண்டு படித்து ஆறாம் ஆண்டுக்கு அல் மனார் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்று நாங்கள் கனவு கண்டு கொண்டு இருந்தோம். மருதூர்க் கொத்தன் உட்பட அங்கு எங்களை யாரும் செல்ல விட வில்லை. அவர்கள் போராட்டம் நடத்தி ஸம்ஸ் மத்திய கல்லூரியை உருவாக்கினார்கள். அதன் அதிபராக இருந்தார். அவர் காலை கூட்டத்தில் ஆற்றும் உரைகளைக் கேட்டு இருக்கின்றோம். அவர் உரையாற்றும் போது இவ்வளவு பெரிய கட்டுப் புத்தகத்தை வாசிக்கவா போகிறார் என்று அவதானித்தோம். அவர் அப்பொழுது குறிப்பிட்டார் பெரிய ஆடுகளைத் தூக்க வேண்டும் என்றால் தூக்க முடியாது. சின்ன ஆடுகளை வாங்கி ஒவ்வொரு நாளும் ஒரு தடவை இரு தடவை தூக்கிப் பார்ப்போம். அவை ஐம்பது கிலோ 60 கிலோ இருந்தாலும் பட்டென்று நீங்கள் தூக்கி விடுவீர்கள். அப்பாடசாலை இப்பொழுது கம்பீரமாக இருக்கின்றது. நான் பாடசாலைக்கு பிந்தி வருவேன். அவர் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டு போவார். க. பொ. த உயர் தரப் பரீட்சை பெறுபேறு வந்தவுடன் என்னைப் பார்த்து நீங்களும் ஒரு சாதனை வீரர்தான் என்று என்னிடம் கூறினார். அதற்கு எப்படி பெறுபேறு வரும் என்று கேட்டேன். அதற்கு நான்கு ஏ வரும் என்றேன். அவர் அதற்கு ரொம்பதான் ஆசை என்றார். இந்த நூலை வெளிக்கொணர்வதற்கு முயற்சி செய்த இருவருக்கும் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**என். பார்த்தீபன்**

# பாணந்துறை ஜீ லானில் பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் தெரிவு

**(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)**

பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2024, 2025 ஆம் ஆண்டுக்குரிய பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவு அதிபர் ஏ. எம். ஹலீம் மஜீத் தலைமையில் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் றிழ்வான் (இஸ்லாஹி) முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக எஸ்.ஏ.ஸி.எம். இம்தாத், உதவிச் செயலாளராக எம்.ஏ.றிஸ்னி அஹமட் ஆகியோரும் பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளராக பஸ்னா இக்பால், உதவிச் செயலாளராக மனால் அம்றாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பழைய மாணவர் சங்கத்தில் எம். மிப்றாஸ் (பொருளாளர்), எம். எப்.ஏ. காலிக் (உதவி பொருளாளர்), செயற்குழு உறுப்பினர்களாக; இஸட்.எச்.எம். நிஸ்றீன், ஏ.ஸி. அய்ஷர், எம். ஆர்.எம். றமழான், எம்.டி.எம். இல்ஹாம், எம்.எப்.எம். பயாஸ், பீ.எப்.எம். றிஸார்ட், எம். ஐ.எம் . இர்பான், எம்.டபிள்யூ.எம். பர்ஹான் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பழைய மாணவிகள் சங்கத்தில் எம்.ஐ.எப். றம்ஸானியா (பொருளாளர்), செயற்குழு உறுப்பினர்களாக எம்.எம்.எப். பஹிமா, எம். என்.நஸ்ரின் றிஸ்வானா, எம்.எல். எப்.றீஸா, எம்.டி.எப் ஹஸ்னா,

எம். எப்.பாத்திமா, எம். எப்.எப் பமீலா, எம்.எஸ்.எஸ். நிஸ்பரா, எம்.டபிள்யூ.எப். பர்வின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆசிரியைகளான எம். என். எப் மிஸ்ருல் கரீமா, எம்.எம். மிஸ்ருல் பர்ஷானா, எஸ்.எச். மிஸ்ருல் அமீனா ஆகியோர் பழைய மாணவிகள் சங்கத்தின் ஆலோசகர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

# வை.எம்.எம்.ஏ. தேசியத் தலைவருக்கு ஆசிய சிறந்த சமூக சேவையாளர் விருது




அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. சம்மேளனத்தின் தேசியத் தலைவர் இஹ்ஸான் அஹமட் ஆசியாவின் சிறந்த சமூக சேவையாளருக்கான விருது' வழங்கி பாராட்டி அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

"Leader Ship Awards" தொனியில் "Asia Awards" பணிப்பாளர் எஸ். அபூதாஹிர் முன்னிலையில் 'சர்வ தேச ஆராய்ச்சி காங்கிரஸ்' ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இவ் விசேட விருது விழா இந்தியாவின் தமிழ்நாடு திருச்சியில் Hotel Breeze Residency'யில் சிறப்பாக நடைபெற்றது.

பதுளையைச் சேர்ந்த மர்ஹூம்களான ஸவாஹிர் ஹமீட், ஜே.ஜே. நயீமா ஜமால்டீன் தம்பதியின் சிரேஸ்ட புதல்வாரன இஹ்ஸான், பதுளை 'தர்மதூதவின் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவரும் ப/பதுளுப்பிட்டிய 'ஹைராத்' பள்ளிவாசலின் தலைவரும், ப/பைத்துஸ் ஸகாத்' அமைப்பின் பொருளாளருமாவார்.

பதுளை வை.எம்.எம்.ஏ. வின் நிர்வாகக் குழு உறுப்பினராக இணைந்து சமய மற்றும் சமூக நலன்புரி செயலாளராக, தொடர்ந்து பொதுச் செயலாளராக, பொருளாளராக, தலைவராகவும் பதவிகளை வகித்தவர். சிறந்த பொருளாளர், சிறந்த தலைவருக்கான தேசிய வை.எம்.எம்.ஏ. விருதுகளையும் சுவீகரித்தவர்.

பதுளையிலிருந்து தேசிய வை.எம்.எம்.ஏ. யினை பிரதிநிதிப்படுத்திய மூன்றாவது தலைவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

**(அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ்)**

# கற்கை நெறியை முடித்த யுவதிகளுக்கு சான்றிதழ்கள்



**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

திருமண வாழ்வில் இணையவுள்ளவர்களுக்கு நடத்தப்பட்ட இலவச கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.இந்த கற்கை நெறியை "லைப் பொண்ட்" சமூக சேவை நிறுவனம் நடத்தியது.

இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ( 03) கொத்தட்டுவயில் அமைந்துள்ள நாஸ் (NAAS) கலாசார நிலையத்தில் நடைபெற்றது. லைப்பொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம். ஆர்.எம். ஸரூகின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக "ரைன்கோ" நிறுவனத்தின் தலைவரும் நாடறிந்த சமூக சேவையாளருமான அல்.ஹாஜ் எஸ்.எல்.எம்பௌஸ் கலந்து சிறப்பித்தார்.இதில், பல சமூக நிறுவனங்களின் தலைவர்களும் சமூக நலன் விரும்பிகளும் பங்கேற்றிருந்தனர்.

# கேள்வி சமர்ப்பிக்கும் காலத்தை நீடிப்பதற்கான பெறுகை அறிவித்தல்

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு**

**தொழில் திணைக்களம்**

## ஆலோசனைக்கான அழைப்பு (Request for Proposals)

அரச தனியார் கூட்டு அடிப்படையில் “மெஹெவர பியச” கட்டிடத்தில் பொது வசதிகளை திட்டமிடல், நிதியிடல், நிர்மாணம், நடத்திச் செல்லல் மற்றும் ஒப்படைத்தல் மேற்படி பெறுகையுடன் சம்பந்தப்பட்ட 2023.11.09ம் திகதிய பெறுகை அறிவித்தலுடன் சம்பந்தப்பட்டது.

இப் பெறுகைக்கான ஆலோசனைகள் (RFP) சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் 2023.12.15 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | கேள்வி சமர்ப்பித்தல் மற்றும் திறத்தல் | கேள்விகள் செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை செல்லுபடி காலம் |
|---|---|---|---|
| திட்டமிடப்பட்ட திகதி மற்றும் நேரம் | 2023 டிசம்பர் 08 (பி.ப. 2.30) | 2024 மே 13 | 2024 ஜூன் 10 |
| நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | 2023 டிசம்பர் 15 (பி.ப. 2.30) | 2024 மே 20 | 2024 ஜூன் 17 |

மேற்படி மாற்றம் Request for Proposal (RFP) அட்டவணையில் உள்ள சகல பிரிவுகள் மற்றும் RFP அட்டவணைக்கு இணைப்பு மற்றும் உப பிரிவுகளும் பொருந்தும் மேற்படி மாற்றங்களுக்கு மேலதிகமாக, RFP அட்டவணையுடன் ஒன்றாக வாசிப்பதற்கு முன் கேள்விக் கூட்டத்தின் மேலதிக இணைப்பு மற்றும் கூட்ட அறிக்கை வழங்கப்படும்.

எப்படி இருப்பினும், Request for Proposal (RFP) அட்டவணையில் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி இருக்கும்.

**தலைவர்,**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டி,**
**மே/ப, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு,**
**07ம் மாடி, “மெஹெவர பியச”,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு - 05**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/23/ PT/10/038 | Upgrading of SLPA e-Mail Exchange Cloud Hosting of e-mail boxes | 90,000.00 | 1000.00 | 2023.12.20ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 டிசம்பர் 08ஆம் திகதியிலிருந்து 4ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/103** கிழக்கு மாகாண உயர் மின்னழுத்த மின்சார கட்டமைப்பு (33kV/11kV) சம்பந்தமான GPS/GIS கள தரவு சேகரிப்பு | 20.12.2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 2500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/034** உப்புவெளி திருகோணமலையில் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தின் கூரைமேல், 60kv சூரிய ஒளி மின் அமைப்பினை வழங்குதல் விநியோகித்தல் நிறுவுதல் மற்றும் இயக்குதல் | 03.01.2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 6000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/142** வாடகைக்கு வான் - மனி அத்தியட்சகர் - I (திட்டமிடல்) - பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 20.12.2023ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/143** வாடகைக்கு மோட்டார் கார் மின் பொறியியலாளர் (விநியோக கட்டுமானம்) - திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 20.12.2023ம் திகதி பி.ப. 2.00 மண | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/144** வாடகைக்கு வீடு - மின் அத்தியட்சகர் விடுதி (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம் ) - அம்பாறை (இரண்டு வருட காலம்) | 20.12.2023ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/145** வாடகைக்கு கட்டிடம் களுவாஞ்சிக்குடி மின் பாவனையாளர் சேவை நிலையம் - மட்டக்களப்பு (இரண்டு வருட காலம்) | 20.12.2023ம் திகதி பி.ப. 2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம் (மட்டக்களப்பு) 065-2222639 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 500.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுதிகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**TENDER No.: NSB/PT/2023/15**

## பாடசாலை பைகளின் வழங்கல்

கீழே விபரிக்கப்பட்டவாறான பாடசாலை பைகளை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த முதன்மைத் தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து 10,000 பாடசாலை பைகளை வழங்குவதற்காக பொதுக் கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 10,000 எண்ணிக்கையான பாடசாலை பைகள் |
| பெறுகையின் முறை | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | 5,000 ரூபா |
| சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி | 150,000 ரூபா |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2023.12.27 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம் | 2023.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2023.12.07 ஆம் திகதியிலிருந்து 2023.12.27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்துமூலமான கோரிக்கையொன்றின் மூலமாக வழங்கப்படும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து 105 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
4. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை வழங்கலுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு – கீழ்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

---

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 1. | அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக மெத்தைகளின் கொள்வனவு (Bid No.: RDA/EOM&M/PRC/2023/GEN/51) |
| 2. | அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக பத்திரத்தன்மை உபகரணங்களின் கொள்வனவு (Bid No.: RDA/EOM&M/PRC/2023/TRA/08) |
| 3. | Erection of 4C/95.0 SQ.MM. Aluminium Bundle Cable at Peliyagoda Interchange in Expressway Operation, Maintenance & Management Division. (Bid No.: RDA/EOM&M/PRC/2023/ELE/25) |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள கொள்வனவிற்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.12.07 ஆம் திகதியிலிருந்து 2023.12.20 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅம மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அநெசெபமு பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (அநெசெபமு பிரிவு) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன,**
**வல்கம, பண்டாரகம.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your ad For Better Offers

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

---

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : Kadu/Land/04/136D/Add/RDA
காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/5/2020/HW/145

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.09 ஆம் திகதி 2357/42 இலக்க அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் - மேல்
மாவட்டம் - கொழும்பு
பிரதேச செயலாளர் பிரிவு - கடுவலை

| ஆ.வ.இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 522036/08/1 | 07 | 0.0140 | கொரதொட்ட | இல.488, கொரதொட்ட |
| 522036/03/1 | 02 | 0.0031 | கொரதொட்ட | இல.488, கொரதொட்ட |

**எச்.எஸ். சம்பத் இடம்கொடகே**
**பிரதேச செயலாளர்**
**கடுவலை**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கடுவலை**
**2023.12.04**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாவட்டச் செயலகம் – பதுளை

01. பதுளை மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் வழங்கலை மேற்கொள்வதற்காக மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலையின் பெயர் | விசேடக் குறிப்பு | சராசரி மதிப்பீட்டுத் தொகை (வெட் இன்றி) ரூபா. மில். | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (விலைமனுப் பிணை) பணமாக / இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பிணை முறி மூலம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக (ரூ.) | வங்கி முறியாக (ரூ) |
| 1 | மஹியங்கனை புதிய பிரதேச செயலகக் கட்டிடத்தின் கூட்ட மண்டபத்திற்கு வளிச்சீராக்கம் செய்தல் | 2023-12-25ஆம் திகதியாகும் போது வழங்கல் செயற்பாடுகள் முடிவுறுத்தப்படல் வேண்டும். | 9.2 | 3500.00 | 46000.00 | 92000.00 |

02. பெறுகை நடவடிக்கைகள் சந்தை விலைக்கோரல் கேள்வியிடல் முறையின் கீழ் செயற்படுத்தப்படும்.
03. மேற்குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கு இயைபான விலைமனு ஆவணங்களை 2023-12-04ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையிலும் 18ஆம் திகதி 09.00 மணித்தியாலம் முதல் 12.00 மணித்தியாலம் வரையான காலத்தினுள் அலுவலக நேரத்தினுள் மீளளிக்கப்படாத விலைமனு வைப்பை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பதுளை மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதியின் 3வது மாடியில் உள்ள நிதி முகாமைத்துவப் பிரிவிற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
04. மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை இலங்கை வங்கி, பதுளை கிளையில் பேணப்படும் 7042240 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் எந்தவொரு வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் ஏனைய ஆவணங்களை மாவட்டச் செயலக நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் பேரில் பிரதிநிதியொருவர் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. ஒவ்வொரு வேலைக்காகவும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் படிவங்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரை பொறித்து ''தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை'' எனும் முகவரிக்கு 2023-12-18ஆம் திகதி 2.00 மணித்தியாலத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதுளை மாவட்டச் செயலக கட்டிடத்தொகுதியின் 3வது மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம்.
06. தபாலில் ஏற்படும் தாமதம் தொடர்பில் பெறுகைக் குழு எவ்வித பொறுப்பும் கூறமாட்டாது என்பதுடன் தாமதமாகிக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. 2023-12-18ஆம் திகதி 15.00 மணித்தியாலத்தில் பதுளை மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதியின் 5வது மாடியில் அமைந்துள்ள மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இதன்பொருட்டு நீங்களோ அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவரோ கலந்து கொள்ளலாம்.
08. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது குறித்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது.
10. மேலதிக விபரங்களை 055-2222048 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**
**2023-12-04.**

---

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
### நகர அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

கீழே விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (கீழ் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**அட்டவணை – 01**

| விலை மனு இல. | செயற்றிட்டப் பெயர் | பெசேவ நீங்கலாக மதிப்பீட்டு ஆகுசெலவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலை மனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்களில்) | தகுதியுள்ள CIDA பதிவுத் தரம் | விலை மனுப் பிணை செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | காலி கோட்டையின் ஒல்லாந்தர் வைத்தியசாலையின் கூரையை பழுதுபார்த்தல் **PD/UDA/DPC/R.Ro of Dutch/Galle Fort/031/2023** | 16,000,000.00 | 4,500.00 மற்றும் வரிகள் | 160,000.00 | 120 நாட்கள் | சி-7,சி-6 மற்றும் சி-5 | 2024.04.10 ஆம் திகதி வரையும் |
| 2. | பேலியகொட மற்றும் ஹேனமுல்ல 233 வத்தவிலுள்ள மீதியான வீடுகள் மற்றும் குடிசைகளின் கட்டமைப்புக்களின் இடித்தல் மற்றும் இடிபாடுகளை அகற்றல். **PD/UDA/DPC/ DEMOLITION/ PELIYAGODA/026/2023** | 8,000,000.00 | 3,000.00 மற்றும் வரிகள் | 80,000.00 | 30 நாட்கள் | - | 2024.04.10 ஆம் திகதி வரையும் |

01. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.
02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள ஏனைய தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகைத் தலைவரிடமிருந்து பெற்று 2023 டிசம்பர் 7 ஆம் திகதியிலிருந்து 2023 டிசம்பர் 27 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பெறுகை அலுவலகத்தின் தலைவரிடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
04. 2023 டிசம்பர் 07 ஆம் திகதியிலிருந்து 2023 டிசம்பர் 27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகின் பெறுகைத் தலைவருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரினால் கொள்வனவு செய்யப்படலாம்.
05. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதுமானதும் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கேற்றவாறான வங்கி உத்தரவாத பாங்கில் விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையங்கள் மற்றும் விலைமனுப்பிணையங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 01 ஆம் அட்டவணையில் கூறப்பட்டிருப்பதுடன் அவைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
06. ஒவ்வொரு விலைமனுவும் தனித்தனியான தபாலுறைகளில் இரு பிரதிகளில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்), பெறுகை அலகு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 7 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு 2023 டிசம்பர் 28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளிப்பதற்கு நியமிக்கப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
07. பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை அலகில் 2023 டிசம்பர் 18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக் கூட்டமானது நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் இந்த கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
08. விலைமனுதாரர்களை தெரிவு செய்தலில் விலைமனுதாரரின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவச் சொத்து நிலைமை ஆகியன கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்படும். தரம் குறைந்தளவில் செயற்பாட்டை மேற்கொண்ட விலைமனுதாரர் எந்தவொரு விலைமனுவையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.
09. எந்தவொரு விலைமனுக்களையும் தயாரித்தல் தொடர்பான ஆகுசெலவிற்கான எந்தவொரு பொறுப்பையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ள மாட்டாது. திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ் மட்டம்) பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமான விலைமனுவொன்றை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. திணைக்கள பெறுகைக் குழுவின் (கீழ் மட்டம்) தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**07 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', I ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

# கேள்வி அறிவித்தல்

## வலஸ்முல்ல பஸ் நிலையத்தின் கடை அறை இல. 04, 11, 14 ஆகிய கடை அறைகளை குத்தகைக்கு விடல்

### வீரகெட்டிய பிரதேச சபை

வீரகெட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான வலஸ்முல்ல பஸ் நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைஅறை இல. 04,11,14 என்ற கடைஅறைகளை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2023.12.07 மு.ப. 8.30 முதல் 2023.12.21 பி.ப. 3.00 வரை கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படுவதுடனி, தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையை சமர்ப்பித்து கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி கேள்விப்படிவங்களை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்வதற்கு முன்பு தமது ஆளடையாளத்தை மற்றும் நிரந்தர பதிவை உறுதி செய்வதற்கு குறித்த கிராம அதிகாரி சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென 02 பிரதிகளுடன் பொறியிடப்பட்ட படிவத்தை ஒரே உறையில் இட்டு 2023.12.22 மு.ப.10.00 இற்கு முன்பு வீரகெட்டிய பிரதேச சபையில் உள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் அல்லது அன்றே குறித்த நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

2023.12.22 மு.ப. 10.15 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வீரகெட்டிய பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன், கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்: 047 - 2246375**

| தொடர் இல | கடை அறை இல. | கடை அறையின் சதுர அடி அளவு | மாதாந்த குத்தகை தொகை (ரூ) | குறைந்தபட்ச கேள்வி (சேர்ந்த தொகை) (ரூ) | கேள்விப் பிணை வைப்பு (ரூ) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01 | 04 | 231.00 | 14,500.00 | 1,450,000.00 | 25000.00 | 2000.00 |
| 02 | 11 | 165.00 | 11,400.00 | 1,140,000.00 | 25000.00 | 2000.00 |
| 03 | 14 | 165.00 | 11,400.00 | 1,140,000.00 | 25000.00 | 2000.00 |

**ஜீ.ஏ.நதீகா தில்ஹானி,**
**செயலாளர்,**
**வீரகெட்டிய பிரதேச சபை**

---

### உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா
### எல்ல பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

எல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான எல்ல நகரத்தில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியின் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள தரைத் தளம் மற்றும் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள முதலாம் மற்றும் இரண்டாம் தளங்களை நிர்மாணித்து 30 வருட காலத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்களை உள்ளடக்கிய முன்மொழிவுகளைக் கோருதல்.

இதன்பொருட்டு முன்வர விரும்பும் விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை 2023-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

- இதற்கான விலைமனுக்களை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகள் இலங்கைப் பிரஜைகள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.
- விலைமனுதாரர்களை தெளிவுபடுத்தும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-12-15ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு எல்ல பிரதேச சபையில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதுடன் அன்றைய தினம் குறித்த இடப்பரப்பை பரீட்சித்துப் பார்க்கலாம்.
- கேள்விப் படிவங்கள் மற்றும் அதற்கு இயைபான நிபந்தனைப் படிவங்களை 2023-12-07ஆம் திகதி முதல் 2023-12-27ஆம் திகதி வரையான கடமை நேரங்களில் மீளளிக்கப்படாத 7,500.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் குறித்த பணத்தை மக்கள் வங்கி, பதுளை கிளையில் பேணப்படும் 010100112548269 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து குறித்த பற்றுச்சீட்டுடன் வேண்டுகோள் கடிதமொன்றை உள்ளூராட்சித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் அல்லது உள்ளூராட்சித் திணைக்களத்தின் clguva@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பணம் செலுத்தியதை உறுதி செய்துகொண்டதன் பின் வரவழைத்துக் கொள்ளலாம். (தபால் / கூரியர் கட்டணத்தை விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்).
- பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் உட்பட செயற்றிட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் 2023-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் 2023-12-28ஆம் திகதி செயற்றிட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்தவுடன் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா எனும் முகவரியில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- கேள்விப் படிவங்கள் உட்பட செயற்றிட்ட முன்மொழிவுகளை 2023-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவாவிற்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
- கேள்விப் படிவங்கள் உட்பட செயற்றிட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், செயற்றிட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் அவற்றின் நகல் பிரதிகள் சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அதில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தெளிவாகக் குறிப்பிட்டு அவ்விரு கடித உறைகளையும் வேறொரு கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் எல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான எல்ல நகரத்தில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியை குத்தகைக்கு வழங்குதல் - 2023 எனக் குறிப்பிட்டு நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது தலைவர், பெறுகைக் குழு, உள்ளூராட்சித் திணைக்களம், மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
- குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| தொ. இல. | விபரங்கள் | மாதாந்த கேள்வித் தொகை (முதல் ஐந்து வருடத்திற்கு) | சதுர அடி | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் பிணை வைப்புத் தொகை | ஒரு முறை செலுத்தப்படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01. | தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள தரை தளம் | | 2000 | | | |
| 02 | நிர்மாணித்து முடிவுறுத்தப்பட வேண்டிய முதலாம் தளம் | ரூபா 550,000.00 (முதலாம் மற்றும் இரண்டாம் தளங்கள் நிர்மாணிக்கப்பட்டு முதல் 09 மாதத்திற்குள் மாதாந்த குத்தகை வாடகையின் 35% செலுத்துதல் வேண்டும்) | 2000 | ரூ. 7500.00 | ரூ. 500,000.00 | ரூ. 20,000, 000.00 |
| 03 | நிர்மாணித்து முடிவுறுத்தப்பட வேண்டிய இரண்டாம் தளம் | | 2000 | | | |
| | வாகனத் தரிப்பிடம் | | ஒரு தடவையில் சுமார் 10 வாகனங்களை நிறுத்தக் கூடியது | | | |

- கேள்வி விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்போது மேற்கூறிய 1, 2, 3ஆம் தொடர் இலக்கங்களை ஒன்றாக கவனத்திற்கொண்டு விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தரை தளம், முதலாம் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு வெவ்வேறாக அல்லது இரண்டு தளத்திற்கு மட்டும் விலைகளைச் சமர்ப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கேள்வி விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்படாது நிராகரிக்கப்படும்.
- மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையின் பொருட்டு இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கிப் பிணை முறியொன்றை 2024-03-28ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறி கேள்வி ஆவணங்களின் தரப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் மாத்திரம் இருத்தல் வேண்டும்.
- மேற்கூறிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு இயைபான 30 வருட காலத்திற்குச் செலுத்த வேண்டிய மாதாந்த குத்தகை வாடகை சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதுடன் (விண்ணப்பப் படிவத்தில் கேள்விதாரர்களுக்கான அறிவித்தலைப் பார்க்கவும்) ஒரு முறை செலுத்தப்படும் தொகைக்கு இயைபாக மேற்கூறப்பட்டுள்ள ஆகக் குறைந்த தொகை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை குத்தகைதாரர் முன்வைத்தல் வேண்டும். இதற்குப் புறம்பாக முதலாம் மற்றும் இரண்டாம் தளங்களை குத்தகைதாரர் தமது நிதியைப் பயன்படுத்தி நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.
- விண்ணப்பதாரர் தனிநபர் வியாபாரம் / கூட்டு வியாபாரம் / நிறுவனம் எனும்போது விண்ணப்பப் படிவத்துடன் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதி மற்றும் நிறுவனம் எனும்போது நிறுவனக் கூட்டிணைப்புச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தனிநபர் விண்ணப்பதாரர் எனும்போது தேசிய அடையாள அட்டை/வெளிநாட்டுக் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இது தொடர்பான மேலதிக தகவல்களை 0572228575 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா**

Daily News Classifieds, the Housewives' companion

---

N-108

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து/வழங்குநர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன

| NO | Item | Bid Reference No | Bid fee | Bid Bond |
|---|---|---|---|---|
| 1 | White Gum (Book Binding Adhesive) - 2500 Kg | SCP02/NCB21/W/G/2024-5 | Rs.3000.00 | 60,000.00 |
| 2 | Animal Flue (Glue Cascade) - 2500 Kg | SCP02/Animal Glue/NCB20/2024-4 | Rs.3000.00 | 80,000.00 |

2023.12.07 ஆம் திகதி முதல் 2023.12.27 ஆம் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.0 மணி முதல் பி.ப.3.00 மணி வரை மேற் கூறப்பட்டுள்ள உருப்படிகளுக்கு ரூபா 3000.00 வீதம் மீளளிக்கப்படாத மனுக்கட்டணம் செலுத்தி, கீழே தரப்பட்டுள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் விலைமனு திறக்கப்படும் இறுதிதினம் - 2023.12.28ஆந் திகதி பி.ப.2.00 மணி

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.4.15 மணி வரை 011-2694898 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது **www.documents.gov.lk** இணையதளத்தினூடாக தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்.
**பொருட்கொள்வனவு திணைக்களம்,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**2023.12.07**

**தொலைபேசி : 011-2694898**
**இணையதளம் : www.documents.gov.lk**

---

Funded by The European Union

THE WORLD BANK IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### கமத்தொழில் அமைச்சு
## விவசாயத் துறையை நவீனமப்படுத்தும் திட்டம்
### IDA Credit No.: 5873 LK

# பெறுகை அறிவித்தல்

## பதுளை மாவட்டத்தில் கிரந்துருகோட்டை மிளகாய் உலர்த்தும் நிலையத்தின் நிர்மாணம்

**(ஒப்பந்த இல.: LK-MOA-PMU-365182-CW-RFB)**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் செலவை நோக்கி 58.630 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையாக பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கமத்தொழில் அமைச்சு, ASM திட்டத்தின் சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | பணிகளின் விபரம் | வெட் தவிர்த்து மதிப்பிடப் படும் செலவு (ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைமனு பிணை தொகை ரூபா | விலை மனு பிணை செல்லுபடி | மீளளிக்கப் படாத ரொக்கப் பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA -PMU-366182-CW-RFB | பதுளை மாவட்டத்தில் கிரந்துருகோட்டை மிளகாய் உலர்த்தும் நிலையத்தின் நிர்மாணம் | 16.6 | 3 மாதங்கள் | கட்டிட நிர்மாணத்தில் C6 அல்லது அதற்கு மேல் | 166000.00 | 2024 மார்ச் 22 | 12500.00 |

3. மேலுள்ளவாறு செல்லுபடிக் காலத்துடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விலைமனு பிணையுடனும் மேலுள்ள வேலைக்காக கூறுவிலையிடுவதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் ஒரே ஒரு கூறுவிலை இடுவதற்கு விலைமனுதாரர் ஒருவருக்கு அனுமதிக்கப்படும். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) மேலுள்ள அட்டவணையில் கூறப்பட்ட தர நிலைக்காக குறித்த நிர்மாணத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
4. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NBC) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
5. விலைமனு ஆவணத்தின் 4 ஆவது பிரிவில் தேவையான தகைமை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் (பிரிவு 5) தரப்பட்டுள்ளது.
6. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்டப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு (தொ.பே.: 0112073044/ 0714881265/ 0714961603, தொலைநகல் இல: 0112877546) (மின்னஞ்சல்: **procurementspasmp@hotmail.com**) 9.00 மணி தொடக்கம் 14:00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மொனராகலை, ஹுலன்தவ, வல்லவாய வீதி, இல. 566, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், மாகாண திட்ட கண்காணிப்பு பிரிவில் 2023 டிசம்பர் 14 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.
8. 2024 மார்ச் 08 ஆம் திகதி வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனுவானது விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை செலுத்தி 2023 டிசம்பர் 08 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 22 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை மொனராகலை, ஹுலன்தவ, வல்லவாய வீதி, இல. 566, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், மாகாண திட்ட கண்காணிப்பு பிரிவுக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
11. விலைமனுவை ஏற்கும் இறுதித் திகதி 2023 டிசம்பர் 22 அன்றாகும்.
12. விலைமனுக்களை மேல் குறிப்பிடப்பட்ட விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியில் 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் பிரதித் திட்டப் பணிப்பாளர், மாகாண திட்ட கண்காணிப்புப் பிரிவு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், இல. 566, வல்லவாய வீதி, ஹுலன்தவ, மொனராகலை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
13. முழுமையான விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் வெவ்வேறாக மூடப்பட்டு முறையே கடித உறைகளில் 'அசல்' மற்றும் 'நகல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை கடித உறையில் மூடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.**
திகதி: 2023 டிசம்பர் 06


To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் பொருள்வளம்**
**Assistant General Manager – Human Resources & Logistics**

**முக்கிய பொறுப்புகள்:**

- வங்கியின் ஒட்டுமொத்த மனித வள/நிர்வாக செயற்பாடுகளை வழிநடத்துதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் விநியோகங்களின் அனைத்து அம்சங்களின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டைப் பேணுதல்.
- மனித வள முகாமைத்துவத் திட்டத்தின் வளர்ச்சி மற்றும் செயற்படுத்துவதற்கு உதவுதல்.
- தற்போதுள்ள மனித வளம் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல். வங்கியின் இலக்குகளை அடைய புதிய உத்திகளை உருவாக்குதல்.
- மனித வள முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் தொடர்பான அனைத்து செயல்பாடுகளுக்கும் வழிகாட்டுதல்.
- தொழிற்துறை உறவுகள் தொடர்பான ஒழுக்கம் மற்றும் விடயங்களைக் கையாளுதல்.

**தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட மனித வளம் அல்லது முகாமைத்துவத்தில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டம் மற்றும் இலங்கை ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம். (CIPM)/ UK.

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் மற்றும் மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் மற்றும் இலங்கை ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனத்தின் டிப்ளோமா. (CIPM)/ UK.

சட்டம் தொடர்பான தகைமைகள் அனுகூலமாக கருதப்படும்.

**வேலை அனுபவம்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் மனித வள முகாமைத்துவம் அல்லது நிர்வாகத்தில் குறைந்தபட்சம் பன்னிரண்டு (12) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். இதில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும். தொழிலாளர் சட்டம் மற்றும் தொழிலாளர்கள் தொடர்பான சட்ட விடயங்களைக் கையாள்வதில் உள்ள அனுபவம் மேலதிக அனுகூலமாக கருதப்படும்.

**சம்பளம்**

சம்பள அளவு: ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம் ரூபா 203,930 - 6,120 x 12 - 277,370. (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு)

**வயது:** 50 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரச துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை** - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 20/12/2023

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/ அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

**விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.**

# இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

## பதவி வெற்றிட அறிவித்தல்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவானது குறைந்த வருமானம் பெறுவோருக்கு சட்ட உதவி வழங்குவதனை அடிப்படை நோக்காகக் கொண்டு 1978 ம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்ட உதவி சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

**பதவி: சட்ட உத்தியோகத்தர் (வெற்றிடம்-01)**

வட மாகாணம் -01 (மன்னார்)

**தகைமைகள்**

1. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் மூன்று (03) வருட செயற்பாட்டு தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 2023.01.01 ஆம் திகதிக்கு வயது 28 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. தனக்குரிய தொழில் பொறுப்பை திறமையாக நிறைவேற்ற வேண்டியதோடு இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

**தொழிலின் பொறுப்பு**

சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணியாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஆணைக்குழுவின் மூலம் சட்ட உத்தியோகத்தருக்காக ஒப்படைக்கப்படும் சகல கடமைகளையும் நிறைவேற்றுதல்.

**சம்பள அளவுத் திட்டம்**

முகாமைத்துவ சேவை சுற்று நிருபத்திற்கு அமைய MM 1-1 Rs.53, 175/= 10x1375, 15x1910=95,575/= + முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF நேர்முகப் பரீட்சையின் பின்னர் இணைத்துக் கொள்ளப்படும்.

(மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் குறிப்பிட்ட காலத்தில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்).

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை 2023 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு" முன்னர் கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் தாங்களினால் விண்ணப்பிக்கப்படும் பதவி மற்றும் இடத்தினைக் குறிப்பிடல் வேண்டும்.

**முகவரி :**

**தவிசாளர்,**
**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,**
**மேல் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, புதுக்கடை, கொழும்பு - 12**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

NC-CAR-0294 RENAULT KWID MOTOR CAR - 2016, OUTBACK BRONZE COLOUR. கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033 080731

**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

32 SRI 0730 MITSUBISHI PAJERO, 1984, கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 080606

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LA-3956 MITSUBISHI, 2000, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 080605

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

BIB-1133 HONDA - 2017 MOTOR CYCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 080601

GQ-6792 BAJAJ, 2002, THREEWH EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0705999 163 . 080602

YM-3863 BAJAJ, 2011, AAK-713 3 BAJAJ, 2013, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 080603

### வேலைவாய்ப்பு

**325 தொழில்துறை பொது**

சாதாரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களை பார்த்துக் கொள்வதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினச் சம்பளம் ஒரு நாளைக்கு ரூ. 2000/ = தேவைப்படும் ஆவணங்கள் கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் இன்றே அழையுங்கள். 0776315983, 0766542999, 0752306797, 0117604526. 080704

The Housewives' companion
Classifieds on
Daily News

(பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)

## இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

### 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல்

2024 ஆம் ஆண்டிற்கு இந் நிறுவனத்திற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக இதுபோன்ற சேவைகளை வழங்கும் வழங்குனர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்வதற்காக **2023.12.07** ஆம் திகதி முதல் **2023.12.28** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள **www.slida.lk** என்ற எமது அதிகாரபூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**
**28/10, மலலசேகர மாவத்தை,**
**கொழும்பு 07.**
**தொலைபேசி : 011-5980200 பெக்ஸ் : 011-2584406 மின்னஞ்சல் : mail@slida.gov.lk**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

# மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – (மேல் மாகாணம்)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக செயற்படுத்தப்படும். எவ்வாறாயினும் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைந்த அல்லது சமமான பெறுமதியைக் கொண்ட திட்டங்களுக்கு மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்துகொண்டவர்களுக்கு வரையறுக்கப்படும்.
3. 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. 011-4849835) என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2023 டிசம்பர் 06ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் PE/2023/UD/34, PE/2023/UD/35 என்பவற்றுக்கு 2023 டிசம்பர் 06ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 20ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மற்றும் PE/2023/KA/33 என்பதற்கு 2023 டிசம்பர் 06ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 27ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), 2ஆம் மாடி, பெறுகை அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அதிகாரிக்கு PE/2023/UD/34, PE/2023/UD/35 என்பவற்றுக்கு 2023 டிசம்பர் மாதம் 21ஆம் திகதி மற்றும் PE/2023/KA/33 என்பதற்கு 2023 டிசம்பர் 28ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய மற்றும் இலத்திரனியல் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் PE/2023/UD/34, PE/2023/UD/35 என்பவற்றுக்கு 2024 ஏப்ரல் 18ஆம் திகதி வரையும் மற்றும் PE/2023/KA/33 என்பதற்கு 2023 ஏப்ரல் 25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் வருடாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளாத மற்றும் பொருத்தமான எண்ணிக்கையாகக் கருதப்படும் எந்தவொரு எண்ணிக்கைக்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலை கட்டுப்படுத்தும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**விலைகூறல் அட்டவணை – 2023**

| தொ. இல | நிதி வளம் | நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு | கேள்வி இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | செயற்றிட்டத்தின் விபரம் | கேள்வியிடக் கூடிய தொகை வெட் இன்றி (மில்லியன்) | ஆகக் குறைந்த ICTAD தரம் (கட்டிடங்கள்) | செயற்றிட்டக் காலம் (மாதங்கள்) | கேள்விக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) வெட் 15% மற்றும் 2.5% SSCL வரியுடன் (ரூபா) | பிணை முறியின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரொக்கப் பணம் | வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதிப் பிணை |
| 1 | OG / Special | களுத்துறை (பாணந்துறை) | PE/2023/KA/33 | பாணந்துறை சிசுவிரு வித்தியாலயத்தில் கட்டிடத்தை நிர்மாணித்தல் | மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் | 92.86 | C-04 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 10 | 22,396.25 | - | 1,393,000.00 |
| 2 | PDG | உடுகம்பொல (மினுவாங்கொட) | PE/2023/UD/34 | மினுவாங் கொடயில் நீச்சல் தடாகம் (கட்டம் iv) | Titanium and Cut & Polish Flooring | 2.05 | C-08 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 01 | 2,357.50 | 15,400.00 | 30,800.00 |
| 3 | PDG | உடுகம்பொல (மினுவாங்கொட) | PE/2023/UD/35 | மினுவாங் கொடயில் நீச்சல் தடாகம் (கட்டம் iv) | Water Proofing in Tears Area | 2.40 | SP-04 அல்லது அதற்கு மேல் (WP) | 01 | 2,357.50 | 18,050.00 | 36,100.00 |

# உள்ளூராட்சி மன்ற அறிவித்தல்

## இரத்தினபுரி மாநகர சபை

## வரைவுப்பாதீடு - 2024

மாநகர சபை நிதியச்சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் 212 (ஆ) ஆதன பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபையின் 2024 நிதிவருடத்துக்குரிய வரைவுப்பாதீடு 2023 மார்கழி மாதம் 13 ஆம் திகதி இறுதி கவனத்திற்காக சமர்பிக்கப்படுவதுடன் பொதுமக்கள் பரிசீரலனைக்கென 2023 மார்கழி மாதம் 06 ம் திகதி தொடங்கி 7 நாட்கள் வரை இரத்தினபுரி மாநகரசபை காரியாலயத்தில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**மாநகர சபை ஆணையாளர்**
**இரத்தினபுரி மாநகர சபை**

**இலங்கை சுதசுன யோகா**
**ஆசிரம கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

வந்தனைக்குரிய அதுரலியே ரதன தேரர் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் இலங்கை சுதசுன யோகா ஆசிரம கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த இலங்கை சுதசன யோகா ஆசிரம கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

1. யோகா பாடம் தொடர்பான கற்பித்தலுக்கான பாடநெறிகளை நடத்துதல் மற்றும் அத்தகைய கற்கைகளுக்காக உயர் கல்வி மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை நடத்துதல்.
2. உள்நாட்டு அல்லது வெளிநாட்டு யோகா பாடம் தொடர்பான பயிற்சி நிறுவனம் ஒன்றுடன், இணை நிறுவனமொன்றாக அல்லது அமைப்பொன்றின் பிரதிநிதியாகச் செயல்படுதல் மற்றும் வெளிநாடுகளுடன் கலாசார பரிமாற்றத் திட்டங்களைத் தொடங்குதல்.
3. இலங்கை கலாசாரம், பௌத்த தர்மம் மற்றும் யோகா தத்துவங்கள் பற்றிய நல்ல புரிதலை வழங்குவதன் மூலம் சுற்றுலா குழுவை மேம்படுத்துதல்.

**பிறவும்.** **வந்தனைக்குரிய அதுரலியே ரதன தேரர்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**தேசிய பட்டியல்**

# பெறுகை அறிவித்தல்

வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## வடிகட்டிகள்/ உராய்வுப் பொருட்கள்/ திரவ வகைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்தல் – 2024

வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ்க் காணும் பொருட்களை வழங்கும் முகமாக வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் 2023.12.28 மு.ப. 11.00 வரை தகைமையுடைய வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

| தொடர் இல | தொடர் இல | தேவைப்படும் உபகரணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ) | 105 நாட்கள் செல்லுபடியாகும் கேள்வி பிணை பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| A | PDHS/ F4/2023/P/16/01 | நிசான் வாகனத்திற்கான வடிகட்டிகள் | 3500.00 | 25000.00 |
| B | PDHS/ F4/2023/P/16/02 | மிட்சுபிஷி வாகனத்திற்கான வடிகட்டிகள் | 3500.00 | 25000.00 |
| C | PDHS/ F4/2023/P/16/03 | டொயோட்டா வாகனத்திற்கான வடிகட்டிகள் | 1500.00 | 25000.00 |
| D | PDHS/ F4/2023/P/16/04 | இசூசு வாகனத்திற்கான வடிகட்டிகள் | 1500.00 | 25000.00 |
| E | PDHS/ F4/2023/P/16/05 | உராய்வுப் பொருட்கள் | 4000.00 | 25000.00 |
| F | PDHS/ F4/2023/P/16/06 | திரவ வகைகள் மற்றும் ஏனைய பொருட்கள் - ஹைபவர், வாகன கழுவும் திரவம், எயார் பிரஷ்னர், கிளாஸ்கிளீனர், டேஷ்போர்ட் பொலிஷ், ரேடியேட்டர் கூலன்ட், பொலிஷின் குளோத், கொட்டன் வேஸ்ட், சே.்.ப்டி கொகல்ஸ், சே.்.ப்டி கம்பூட்ஸ், சே.்.ப்டி ஹெல்மட்ஸ் | 1000.00 | 20,000.00 |

02. இக் கொள்வனவிற்கு எதிர்பார்க்கும் பொருட்கள் சம்பந்தமாக முழுமையான விபரம் மற்றும் மாதிரிகளை வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இலக்கம் : 025 - 2050718)
03. மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர கட்டணத்தை காசாக செலுத்தி மற்றும் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் பெறுகை ஆவணங்களை அநுராதபுரம், வட மத்திய மாகாணம் சுகாதார சேவைத் திணைக்களத்தில் இருந்து 2023.12.06 முதல் 2023.12.27 வரை அலுவலக நேரங்கள் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00) இற்கிடையில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன், அங்கு கட்டணங்கள் இன்றியே குறித்த பெறுகை ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023.12.28 மு.ப. 11.00 இற்குள் கிடைக்குமாறு தலைவர், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.
05. கேள்விகள் இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்படுவதுடன், மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறாக வேறுவேறு கடித உறைகளில் இட்டு அக்கடித உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும். கடித உறையில் “வடிகட்டி/உராய்வு நீக்கி பொருட்கள்/ திரவ வகைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்தல் - 2024” என்று வேறுவேறாகக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
06. 2023.12.28 மு.ப. 11.00 இற்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்விப் பிணையும் இலங்கை மத்திய வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட 2023.12.28 முதல் 105 நாட்கள் (2023.12.22 முதல் 2024.04.11 வரை) செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியின் மூலம் அல்லது மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. இப் பெறுகை பற்றிய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் **தீர்மானமாகும்.**

**தலைவர்/ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் - வ.ம.மா**
**பண்டாரநாயக்க மாவத்தை, அநுராதபுரம்,**
**2023.12.05**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சூரிய PV முறைமையை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், வலையமைப்பிடல் மற்றும் பராமரிப்பதற்கான விலைமனு கோரல்

## திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய

திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் Grid tie Solar PV முறைமையை வழங்குதல், நிறுவுதலுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

சகல PV முறைமை DC/AC விகிதாசாரம் 1.2 (DC/AC விகிதாசாரம் என்பது சூரிய பெனல் முறைமையின் DC தரப்படுத்தல் அளவு இன்வேர்டரில் AC தரப்படுத்தல் அளவைக் காட்டும் விகிதாசாரமாகும்)

(அட்டவணை A) வேலை - பிரதான அலுவலகக் கட்டிடத்திற்கு சூரிய பெனல் மூலம் மின்சாரத்தை வழங்குதல்

| இடம் | முகவரி | AC கொள்ளளவு | இணைப்பு வகை | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா (மீளளிக்கப் படாதது) | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப் படும்) ரூபா | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| திவுலப்பிட்டிய பிரதேச சபை | திவுலப்பிட்டிய பிரதேச சபை | 20kw | Net Account | 3500.00 | 40,000.00 | 90 நாட்கள் |

இந்தப் பெறுகைக்கு சூரிய பெனல், தேவையான சகல பொருத்தும் கட்டமைப்பு சகிதம் இன்வேர்டர் மற்றும் கூரையில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் சார்ந்த சிவில் வேலைகள் மற்றும் சூரிய இன்வேர்டர் கம்பைனர் பொக்ஸ் AC மற்றும் DC கேபள், சூரிய மற்றும் பாதுகாப்பு துணைப்பாகங்கள் உட்பட முறைமையை முழுமைப்படுத்துவதற்கான ஏனைய சகல தேவையான துணைப்பாகங்களும் உள்ளடங்கும். முறைமையை 90 நாட்களுக்குள் வழங்கி, நிறுவி வலையமைப்பிடல் வேண்டும்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டிருத்தல் கூடாது. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதித் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவதாவது:

1) இலங்கையினுள் வலையமைப்பிடல் சூரிய PV முறைமையை வழங்குதல் / நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால முன் அனுபவம்.
2) கடந்த 5 வருடங்களினுள் குறைந்தபட்சம் 20KW கொண்ட இரண்டு சூரிய மின் முறைமையை பொருத்தியிருத்தல் (முன் அனுபவமாக)
3) நான்கு (4) வருடங்களினுள் செயற்பாட்டில் உள்ள அல்லது முழுமைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக கிடைக்கப்பெற்ற சான்றுபடுத்திய கொடுப்பனவாக 15 மில்லியன் ரூபா.

ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய (தொலைபேசி இல. 031-2246275) மூலம் அல்லது திவுலப்பிட்டிய பிரதேச சபையின் அபிவிருத்தி பிரிவிலிருந்து (031-2243866) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் எந்தவொரு வேலை நாளிலும் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் பின்வரும் முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை 2023-12-07ஆம் திகதி முதல் 2023-12-21ஆம் திகதி வரையில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு பெற்றுக்கொண்ட விலைக்கோரல் ஆவணத் தொகுதியை ஆங்கில மொழியில் மட்டும் பூர்த்தி செய்து இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் வேலையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கடித உறையின் ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023-12-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது பதிவு தபால் மூலம் ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்கள் 2023-12-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதில் கேள்விதாரர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் பெறுகைக் குழுவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை,**
**திவுலப்பிட்டிய.**
**2023-12-05ஆம் திகதி திவுலப்பிட்டிய பிரதேச சபையில்.**

it's what you want
www.adz.lk

# வரக்காபொல ஆதார வைத்தியசாலையின் பொது உணவகத்தை நடத்திச் செல்வதற்கான குத்தகைக்கு விடல்

2024ம் ஆண்டிற்காக வரக்காபொல ஆதார வைத்தியசாலையின் பொது உணவகத்தை நடத்திச் செல்வதற்காக 2023.12.07 முதல் 2023.12.29 மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பெறுகை மாதிரிப் பத்திரங்களை 2023.12.07 முதல் 2023.12.28 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்**
**பணிமனை, கேகாலை.**
**தொடர்புகள் கணக்காளர் 035 2222578**

කෘෂිකර්ම අමාත්‍යාංශය

கமத்தொழில் அமைச்சு

**Ministry of Agriculture**

(කෘෂිකර්ම අංශය / விவசாயப்பிரிவு / Agriculture Division)

**Democratic Socialist Republic of Sri Lanka**

**Ministry of Agriculture**

**Agriculture Sector Modernization Project**

**IDA Credit No: 5873 LK**

# PROCUREMENT NOTICE

- **Rehabilitation of Existing Building as the Cluster Processing Center of Kolikuttu Banana in Mullaitivu District (Udaiyaarkattu), LK-MOA-PMU-366004-CW-RFB**
- **Rehabilitation of Padiththa Magalir Thidda Road at Mirusuvil North (Chavakachcheri Pradeshiya Sabha), LK-MOA-PMU-145408-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture, and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Provincial Project Procurement Committee on behalf of the ASM Project, Ministry of Agriculture, now invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No. | Description of Works | Estimated Cost Excluding VAT (Rs.) (Mn.) | Contract Period | Required Grade | Bid Security Amount (Rs.) | Bid Security Validity | Non Refundable Cash Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-366004-CW-RFB | Rehabilitation of Existing Building as the Cluster Processing Center of Kolikuttu Banana in Mullaitivu District (Udaiyaarkattu) | 28.6 | 4 Months | C5 or Above Buildings | 428,850.00 | 01st April 2024 | 5,000.00 |
| LK-MOA-PMU-145408-CW-RFB | Rehabilitation of Padiththa Magalir Thidda Road at Mirusuvil North (Chavakachcheri Pradeshiya Sabha) | 26.7 | 4 Months | C5 or Above in Highways | 400,050.00 | 01st April 2024 | 5,000.00 |

3. Bidders are allowed to quote for the above work with Bid Security and Bid validity date as mentioned in the Bid document. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Northern Province (T.P: 021 221 6358) and inspect the bidding documents at the same place on any working day from 04th December 2023 to 18th December 2023 from 9:00 hrs to 14:30 hrs.
7. Pre-Bid meeting will be held on **11th December 2023** at 10.00 a.m. at Provincial Deputy Project Direcrtor, Northern Province, Agriculture Sector Modernization Project, No. 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Sri Lanka. There will be a site visit to the proposed project site, after the pre-bid meeting.
8. Bids shall be valid up to 04th March 2024.
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project, No: 340, Point Pedro Road, Jaffna, Sri Lanka from 04th December 2023 to 18th December 2023 from 9:00 hrs to 14:30 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the above Table, within the below mentioned period. The method of payment should be by cash.
11. Closing date of the bid is **18th December 2023, 14.30 hrs.**
12. Bids must be delivered to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project, No. 340, Point Pedro Road, Anaipanthi, Jaffna, Sri Lanka at or before 14.30 hrs on the bid closing date as mentioned above.
13. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened immediately after bid closing, in the presence of the bidders' representatives who choose to attend one person at the above-mentioned address.
14. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the ‘original’ and ‘duplicate’ respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee,**
**Provincial Deputy Project Director,**
**Northern Province,**
**Agriculture Sector Modernization Project,**
**No. 340, Point Pedro Road, Anaipanthi,**
**Jaffna, Sri Lanka.**

02nd December 2023

# ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்க இலங்கை இளையோர் அணி பயணம்




ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை இளையோர் அணி நேற்று (06) காலை புறப்பட்டுச் சென்றது.

பயிற்சியாளர்கள் மற்றும் வீரர்கள் என 27 பேர் கொண்ட குழு ஐக்கிய அரபு இராச்சியத்தை நோக்கி பயணித்ததோடு இதில் 15 பேர் கொண்ட இலங்கை இளையோர் குழாத்திற்கு கொழும்பு, றோயல் கல்லூரியின் சினெத் ஜனவர்தன தலைவராக செயற்படுகிறார்.

19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத் தொடர் நாளை (08) ஆரம்பமாகவுள்ளது. முதல் போட்டியில் நடப்புச் சம்பியன் இந்தியா மற்றும் 2017 ஆம் ஆண்டு சம்பியனான ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

கடந்த நவம்பர் 10 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் மீது சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தடை விதித்த நிலையில் இலங்கை அணி ஒன்று சர்வதேச போட்டி ஒன்றில் பங்கேற்கும் முதல் சந்தர்ப்பமாக இது அமையவுள்ளது. எனினும் இலங்கை அணிக்கு சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்கு ஐ.சி.சி. அனுமதி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தத் தடையால் 2024 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண போட்டியை நடத்தும் வாய்ப்பை இலங்கை அணி இழந்தது. இந்த போட்டிகளை நடத்தும் வாய்ப்பு தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட்டது.

எட்டு அணிகள் பங்கேற்கும் 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத் தொடரில் பி குழுவில் இடம்பெறும் இலங்கை இளையோர் அணி முதல் போட்டியில் வரும் சனிக்கிழமை ஜப்பான் அணியை எதிர்கொள்ளவுள்ளது. தொடர்ந்து டிசம்பர் 11 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தையும், டிசம்பர் 13 ஆம் திகதி பங்களாதேஷ் அணியையும் எதிர்கொள்ளவுள்ளது.

ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறவுள்ளன.

கடந்த மாதம் பாகிஸ்தான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை இளையோர் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் 3–2 என வெற்றியீட்டிய நிலையிலேயே ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ண தொடரில் இலங்கை அணி இதுவரை ஐந்து முறை இறுதிப் போட்டிவரை முன்னேறியபோதும் ஒரு முறை கூட சம்பியன் கிண்ணத்தை வென்றதில்லை.

இதுவரை நடந்த 10 ஆசிய கிண்ணத் தொடர்களிலும் ஒன்பது முறைகள் இந்தியாவே கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை இளையோர் குழாம்: சினெத் ஜயவர்தன (தலைவர்), மல்ஷ தருப்பத்தி (உப தலைவர்), புலிந்து பெரேரா, விஷேன் ஹலம்பகே, ரவிஷான் டி சில்வா, ஷரூஜன் ஷன்முகநாதன், தினுர களுபஹன, விஹாஸ் தெவ்மிக்க, விஷ்வ லஹிரு, கருக்க சங்கேத், துவிந்து ரணதுங்க, ஹிருன் கப்புருபண்டார, ருசந்த கமகே, தினுக்க தென்னகோன், ருவிஷான் பெரேரா.

# பந்தை கையால் தட்டி ஆட்டமிழந்தார் முஷ்பீக்




நியூசிலாந்துக்கு எதிராக நேற்று ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் வீரர் முஷ்பீகுர் ரஹிம் மிக அரிதான முறையில் களத்தடுப்பை தடுத்ததற்காக ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார்.

மிர்பூரில் ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்காக 5ஆவது வரிசையில் வந்த முஷ்பீகுர், 41 ஆவது ஓவரை எதிர்கொண்டபோது இந்த ஆட்டமிழப்புக்கு முகம்கொடுத்தார்.

கைல் ஜெமிசன் வீசிய பந்துக்கு தடுத்தாடிய முஷ்பீகுர் துடுப்பில் பட்டு துள்ளிச் சென்ற பந்து விக்கெட்டுக்கு செல்லாமல் இருக்க இடது கையால் தட்டிவிட்டார். இதனை அடுத்து நியூசிலாந்து அணி களத்தடுப்பை தடுத்ததற்காக ஆட்டமிழப்புக் கோரியது. தொடர்ந்து இதனை ஆராய்ந்த மூன்றாவது நடுவர் முஷ்பீகுர் ரஹிமுக்கு ஆட்டமிழப்பு வழங்கினார்.

இதன்படி டெஸ்ட் வரலாற்றில் களத்ததடுப்பை தடுத்ததற்காக ஆட்டமிழப்பு வழங்கப்பட்ட இரண்டாவது வீரராக முஷ்பீகுர் பதிவானார். இதற்கு முன்னர் 1951 ஆம் ஆண்டு நடந்த டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வீரர் எல். ஹட்டன் இந்த முறையில் ஆட்டமிழந்துள்ளார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இவ்வாறான ஆட்டமிழப்பு முறை ஆறு தடவைகளும் டி20 சர்வதேச போட்டிகளில் ஒரு முறையும் நிகழ்ந்துள்ளன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 172 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. முஷ்பீகுர் ரஹிம் பெற்ற 35 ஓட்டங்களுமே அதிகபட்சமாக இருந்தது.

ஏற்கனவே சில்ஹெட்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்ற நிலையில் தொடர் வெற்றியை எதிர்பார்த்தே அந்த அணி இரண்டாவது டெஸ்டில் களமிங்கியுள்ளது. தொடர் தோல்வியை தவிர்ப்பதற்கு நியூசிலாந்து இந்தப் போட்டியில் வெற்றியீட்டுவது கட்டாயமாகும்.

## கிழக்கின் குரல்

# கான் யூனிஸை சுற்றிவளைத்த இஸ்ரேல் படை இதுவரை இல்லாத கடும் தாக்குதல்

## உயிரிழப்பு 16,200ஐ தாண்டியது: மக்கள் தொடர்ந்து ஓட்டம்

தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸை சுற்றிவளைத்து அந்த நகரின் மையப் பகுதியை நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் முன்னேறி வரும் நிலையில் அங்கு போர் வெடித்தது தொடக்கம் இல்லாத அளவுக்கு கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் ஆயுதப் பிரிவுத் தலைவர் முஹமது தயிப் மற்றும் அந்த அமைப்பின் தலைவர் யஹ்யா சின்வாரின் சொந்த ஊரான கான் யூனிஸில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அங்கு உக்கிரம் அடைந்திருக்கும் போர் உயிர்ச்சேதங்களை அதிகரித்துள்ளது.

வடக்கு காசாவில் ஹமாஸ் பலம்பெற்றுள்ள ஜபலியா மற்றும் காசா நகரைச் சூழவுள்ள சைதூன், ஷென்ஜையா, அல் தராஜ் மற்றும் அல் துப்பா பகுதிகளிலும் மோதல் தீவிரம் அடைந்துள்ளது.

காசா போர் மூன்றாவது மாதத்தை தொடும் நிலையில் இஸ்ரேலிய டாங்கிகள் ஹமாஸ் அமைப்பின் கோட்டைகளான கான் யூனிஸ், ஜபலியான மற்றும் ஷுஜையாவை நோக்கி நகர்ந்து வருகிறது.

இந்த நகரங்களில் ஹமாஸ் தொடர்ந்து வலுப்பெற்றிருப்பதாக நம்பப்படுவதோடு இஸ்ரேலிய துருப்புகளுக்கும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தப் பகுதிகளில் தொடர்ந்தும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிக்கியிருக்கும் நிலையில் அவர்கள் பெரும் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளனர்.

போர் விமானங்களின் உதவியோடு காசாவில் கடும் மோதலில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேல் நேற்று (06) கூறியது.

மறுபுறம் எட்டு இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டு அல்லது காயத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும், 24 இராணுவ வாகனங்கள் சேதமாக்கப்பட்டதாகவும் ஹமாஸ் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கஸ்ஸாம் தெரிவித்துள்ளது.

காசாவில் மேலும் இரு துருப்புகள் கொல்லப்பட்டதை இஸ்ரேல்



இராணுவம் உறுதி செய்த நிலையில் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 83ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை கடுமையான வான் தாக்குதல்களுக்கு மத்தியில் இஸ்ரேலிய டாங்கிகள் மத்திய கான் யூனிஸுக்குள் கிழக்கு பக்கம் இருந்து ஆழமாக ஊடுருவ ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அச்சமடைந்த அங்குள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மேலும் தெற்காக ரபாவை நோக்கி வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

### உலகின் ஆபத்தான இடம்

காசாவில் உள்ள மக்களுக்கு வெளியேறும் உத்தரவுகளை இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து வழங்கி வருகிறது. “கியூ.ஆர் குறியீட்டுடனான துண்டுப் பிரசுரங்களை நாம் தொடர்ந்து வீசி வருகிறோம். அது காசாவில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வழிகாட்டும்” என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படையின் பேச்சாளர் டனியேல் ஹகரி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை எகிப்து எல்லைக்கு அருகில் இருக்கும் ரபா பகுதிக்கு அல்லது மத்தியதரைக் கடற்கரையை ஒட்டிய ஒரு குறுகிய நிலப்பகுதியான அல் மவாசியை நோக்கி செல்லுபட்டியே இஸ்ரேல் கூறி வருகிறது.

எனினும் இஸ்ரேல் வழங்கியுள்ள அந்த ஒன்லைன் வரைபடத்தை பெற முடியாதிருப்பதாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருக்கும் பலஸ்தீனர்கள் கூறியிருப்பதோடு, பாதுகாப்பு வலயம் என்பது தவறான கூற்று என்று ஐ.நா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“கூறப்படும் இந்தப் பகுதி குறுகிய வறண்ட நிலமாகும். அங்கே அவர்களுக்கு தண்ணீர், வசதிகள், குளிரில் இருந்து பாதுகாப்பதற்கு தங்குமிடம் எதுவும் இல்லை” என்று யுனிசெப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

காசா மக்கள் தொகையில் 80 வீதமான 1.8 மில்லியன் மக்கள் ஏற்கனவே தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இந்நிலையில் மற்றொரு வெளியேற்ற அலை ஆரம்பித்திருப்பதாகவும் ஒவ்வொரு நிமிடத்திலும் நிலைமை மோசமடைந்து வருவதாகவும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

“எந்த ஒரு பாதுகாப்பு வலயமும் இல்லாத நிலையில் ஒட்டுமொத்த காசாவும் உலகின் அபாயகரமான இடமாக மாறியுள்ளது. தற்காலிக முகாம்களும் அளவுக்கு அதிகமான மக்களால் நிரம்பி வழிகின்றன” என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

### உயிரிழப்பு உச்சம்

கான் யூனிஸ் நகரின் பிரதான மருத்துவமனையான நாசர் மருத்துவமனைக்கு காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ், கார், டிரக் வண்டிகள் மற்றும் கழுதை வண்டிகளில் அழைத்து வரப்படுகின்றனர். இடம்பெயர்ந்து அடைக்கலம் பெற்றிருந்த பாடசாலை தாக்கப்பட்டதாக உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர்.

தரை எங்கும் இரத்தம் தோய்ந்து காணப்படும் மருத்துவமனைக்குள் ஒவ்வொரு அங்குல இடைவெளியிலும் சிறுவர்கள் உட்பட காயமடைந்தவர்கள் வைக்கப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு நோயாளியாக பார்ப்பதில் மருத்துவர்கள் அவசரம் காட்டி வருகின்றனர்.

இரு சிறுமிகள் தொடர்ந்து இடிபாடுகளில் தூசுகள் உடலெங்கும் படிந்திருக்கும் நிலையில் சிகிச்சை பெறுகின்றனர். “அந்த இடிபாடுகளில் எனது பெற்றோர்கள் சிக்கியுள்ளனர்” என்று அழுதபடி ஒரு சிறுமி கூறினாள். “எனக்கு எனது அம்மா வேண்டும். எனக்கு என் அம்மா வேண்டும்.



எனக்கு என் குடும்பம் வேண்டும்” என்று அவள் அழுதுகொண்டே கூறினாள்.

உக்கிர வான் மற்றும் பீரங்கி தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 16,248 ஆக அதிகரித்திருப்பதாக காசா நிர்வாகம் நேற்று தெரிவித்தது. இதில் 7,112 சிறுவர்கள், 4,885 பெண்கள், 286 மருத்துவ பணியாளர்கள், 32 மருத்துவ உதவியாளர்கள் மற்றும் 81 ஊடகவியலாளர்கள் அடங்குகின்றனர். தவிர 7,600 பேர் காணாமல்போயிருப்பதோடு, 43,616 பேர் காயமடைந்துள்ளனர்.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்துள்ள சூழலில் நேற்று மேலும் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். துபாஸ் நகரில் 16 மற்றும் 23 வயதைச் சேர்ந்த இருவரே இஸ்ரேல் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதன்படி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 254 ஆக அதிகரித்துள்ளது.

### பைடனுக்கு ஹமாஸ் பதில்

காசா தொடர்பில் சர்வதேச கவலை அதிகரித்துள்ள நிலையில், இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா, காசாவில் எரிபொருள் மற்றும் ஏனைய உதவிகளை அனுமதிப்பதற்கும் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும் இஸ்ரேல் மேலும் அதிகமாக செயற்பட வேண்டும் என்று செவ்வாயன்று வலியுறுத்தியது.

“அங்கு கிடைக்கும் உதவிகள் போதுமானதாக இல்லை” என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். “அது மேலும் அதிகரிக்க வேண்டும். அது பற்றி நாம் இஸ்ரேல் அரசாங்கத்தை தெளிவுபடுத்தியுள்ளோம்” என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்திய தாக்குதலின்போது பெண்கள் கற்பழிக்கப்பட்டு அவர்களில் உடல்கள் சிதைக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பேசியுள்ளார். “இது பயங்கரமானது” என்று பொஸ்டன் நகரில் அரசியல் நிதி சேகரிப்பாளர்கள் முன் பைடன் கூறினார்.

பைடனின் குற்றச்சாட்டை பொய்யானது என்று மறுத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு அமெரிக்க ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் போர் குற்றங்களை மறைக்கும் இஸ்ரேலின் முயற்சியுடன் பைடனும் இணைந்துள்ளார் என்று டெலிகிராமில் வெளியிட்ட அறிவிப்பில் ஹமாஸ் கூறியது.

கட்டாரின் மத்தியஸ்தத்துடன் ஏழு நாட்கள் நீடித்த போர் நிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை முறிந்த நிலையிலேயே மீண்டும் போர் வெடித்தது. போர் நிறுத்த காலத்தில் ஹமாஸ் பிடியில் இருந்த பணயக்கைதிகள் மற்றும் இஸ்ரேலிய சிறையில் உள்ள பலஸ்தீன கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் குறைந்தது 137 பணயக்கைதிகள் காசாவில் இருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படாத வரை அவர்களை விடுவிப்பதை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

இந்தப் போர் பிராந்தியத்தில் பரந்த அளவிலான மோதல் ஒன்றை ஏற்படுத்தும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது. லெபனானுடனான இஸ்ரேலிய எல்லையில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் இஸ்ரேல் படைகள் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் லெபனானின் தெற்கு எல்லையில் இராணுவச் சோதனைச் சாவடி ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் லெபனான் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

## பலஸ்தீனர்கள் மீது தாக்குதல்

# இஸ்ரேலிய குடியேறிகளுக்கு அமெரிக்கா விசா கட்டுப்பாடு



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் இஸ்ரேலிய குடியேற்ற வாசிகள் மீது விசா கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

பலஸ்தீனர்கள் பலரும் தமது சொந்த நிலத்தில் இருந்து துரத்தப்பட்டுள்ள குடியேற்றவாசிகளின் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் குறிப்பிடத்தக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்து ஒருநாள் கழித்து இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று முன்தினம் (05) இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேலிய குடியேறிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதோடு அது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் மூத்த அதிகாரிகள் எச்சரித்து வந்தனர்.

தனிப்பட்ட விசா தடை குறித்து பிளிங்கன் கூறாதபோதும், செவ்வாய்க்கிழமை தொடக்கம் அமுல்படுத்தப்படும் இந்தத் தடையில் பல டஜன் குடியேற்றவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உள்ளடக்கப்படுவார்கள் என்று இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேலிய குடியேற்றவாசிகளின் தாக்குதல்களில் குறைந்தது ஒன்பது பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.